533
4-53

# நெடுஞ்செழியன் நடராசன், மதியழகன்

கலைச்செல்வன்

கலைமன்றம்
சென்னை-1

வெளியீடு : 111
முதற் பதிப்பு : நவம்பர் 1953
உரிமை உடையது

விலை ரூ. 0—8—0

விற்பனை நிலையம் :
எம். எஸ். ராமுலு கம்பெனி
286, சைனா பஜார்
சென்னை-1

# படித்து மகிழ்வீர்!

நெடுஞ்செழியன், நடராசன், மதியழகன் இந்த மூன்று முன்னணி வீரர்களைத் திராவிடம் நன்கு அறிந்திருக்கிறது. இந்த மூவர் இன்று நாட்டிற்காக உழைத்து நமது அருமை அண்ணா அவர்களுடன் சிறையில் வாடுகின்றனர். அவர்களுடைய வாழ்க்கைக் குறிப்பை மக்கள் அறிந்துகொள்ள விரும்பினர். அவர்களின் வேண்டுகோளை நிறைவேற்றி வைப்பதே நமது நோக்கமாகும்.

ஓரளவு நாம் அறிந்த வரையில் அவர்களுடைய வாழ்க்கைக் குறிப்புகளைத் திரட்டி வைக்கின்றோம். இதனை திராவிடர் படித்து மகிழ்வார்கள் என்ற திடமான நம்பிக்கை எங்களுக்கு உண்டு.

வணக்கம்

**கலைமன்றத்தினர்**

## ஊடுருவி எழுதியவை

●

**ஆராய்ச்சி**

| | |
|---|---|
| கோயில்கள் | (இங்கர்சால்) |
| சீர்திருத்தம் | ,, |
| மூடநம்பிக்கை | ,, |
| மதங்கள் | ,, |
| உண்மை | ,, |
| மக்கள் உரிமை | ,, |
| அறியாமை | ,, |
| கடவுள் | ,, |
| அரசாங்கம் | (லெனின்) |
| மாஜி கடவுள்கள் | |
| தொழிலாளர் | (மாஜினி) |

**வரலாறு**

| | |
|---|---|
| கலிங்கப்போர் | |
| வீரமங்கை ஜோன் | |
| உலகைத் திருத்திய உத்தமர்கள் | (1-ம் பாகம்) |
| ஒளி விளக்குகள் | (2-ம் பாகம்) |
| சீனத்துச் சிங்கம் | |
| ரஸ்புடீன் | |
| வால்டேயர் | |
| நெப்போலியன் | |

**கதைகள்**

| | |
|---|---|
| ரோமியோ-ஜூலியத் | (ஷேக்ஸ்பியர்) |
| லைலா - மஜ்னு | |
| நாநா | (எமிலிஜோலா) |

# நெடுஞ்செழியன்

நடுப்பகல் சுமார் மணி இரண்டு இருக்கும். உயர மான ஒருவர் சுமார் நூறு பேர் புடைசூழ வந்துகொண் டிருக்கிறார். ஒரு பொதுக்கூட்டத்தில் கலந்துகொள்வ தற்காகவே அவர் சென்றுகொண்டிருக்கிறார். இவரு டைய வரவை எதிர்நோக்கி ஆயிரக்கணக்கான மக்கள் ஆவலுடனும் அச்சத்துடனும் காத்து கிடக்கின்றனர் கதிரவன் கடுமையாக தீய்வதைப் பொருட்படுத்தாமல். வழியும் வியர்வையை துடைத்துக்கொண்டு இருக்கின்ற னர் பொதுமக்கள்.

பொதுமக்கள் யாரை விரும்பி—யாருடைய பேச் சைக் கேட்க ஆவலுடன் காத்துக்கிடக்கின்றனரோ அவர் வருகிறார். ஆம்! வந்துகொண்டேயிருக்கிறார். மேடைக்கு அருகில் வந்துவிட்டார். இன்னும் சற்று நேரத்தில் அந்த பேச்சு வல்லுநர் மேடையின்மீது யேறி 'அன்புள்ள' என்று ஆரம்பித்து அடுக்கு மொழி களில் அழகுத் தமிழைப் பேசியும், நகைசுவையை நல்ல தமிழில் நடிப்புடன் நல்கியும், ஆணவப் போக்கினர் அற வழி நடக்கவேண்டிய முறையினையும், இன்று அர சியலில் மலிந்து கிடக்கும் குற்றம் இவ்வளவு—அதனைப் போக்கும் மார்க்கம் இவை என்று துணிவுடனும் தெளி வுடனும் பேசியும், ஆராய்ச்சிக்காரர்களின் அருமையை யும், விடுதலை வீரர்களின் வரலாற்றையும், பழைய உல கத்தையும் படம்பிடித்துக் காட்டியும், திராவிடர் யார்?

அவர்கள் வரலாறு என்ன? அவர்கள் எப்படி இருந்த னர்? எப்படி இருக்கின்றனர் இன்று? ஏன் இந்த நிலை? என்பன பற்றி பல அரிய விஷயங்களை, தனித் தமிழிலும், புலவர் நடையிலும், புரியும் விதத்திலும் பேசப் போகின்றார் என்று கருதியே அந்த மாபெரும் கூட்டத்திலிருந்த மக்கள் காத்திருந்தனர்.

ஆனால்!

அங்கே நடைபெற்றது என்ன? அந்த பேச்சாளர் மேடையின்மீது ஏறவில்லை. ஆனால் மேடையை நெருங் கிவிட்டார். உடனே கற்கள் பறந்தன; மண் மாரி பொழிந்தது.

பேச்சைக் கேட்கக் கூடியிருந்த மக்களை தடிகள் தாக்கின. ஆவலோடு கூடியிருந்தவர்கள் ஐயோ! அப்பா! என்று அலறியோடினர்; கருத்துக் களஞ்சி யத்தைக் கேட்கவந்தவர்கள் கல்லடி தாங்கி ஓடினர்; மகிழ்ச்சியோடு திரும்ப நினைத்தவர்கள் மனங் கலங்கி யோடினர்.

இத்துடன் நின்றனரா? அந்தக் கலகக் கூட்டத்தி னர்? இல்லை. கூட்டத்தில் பேசுவதற்காக வைக்கப்பட் டிருந்த ஒலிபெருக்கியின் 'ஆம்பிலிபயரில்' ஒரு பெரிய கல்லைப்போட்டு நசுக்கினார்கள். சிதறியோடியவர்களை ஆங்காங்கு மடக்கிக்கொண்டு தாக்கினர்.

பேச வந்த அந்தப் பெரும் பேச்சாளர் தலை யின்மீது பெரிய ஒரு கல்லை போட்டு நசுக்கிவிடத் தீர் மானித்த அந்த குண்டர்கள் தம் தீர்மானப்படியே ஒரு

கல்லைத் தூக்கிப்போட்டனர். ஆனால் அவர் பக்கலில் நின்ற ஒரு கடமை வீரர் அந்தக் கல் அவர்மீது விழாத படி தடுத்துவிட்டார். ஆகவே அந்தக் கல் அவர் தலை மேல் விழாமல் பக்கலில் வீழ்ந்தது. இந்த சிக்கலான சூழ்நிலையில் கூட்டத்தை ஏற்பாடு செய்தோர் அந்தப் பேச்சாளரை வற்புறுத்தி அழைத்துக்கொண்டுபோய் அருகிலிருந்த ஒரு ஓட்டலில் இருக்கச் செய்தனர்.

இந்தக் கூட்டத்தில் கலவரம் நிகழும் நிச்சயமாக என்று உணர்ந்த போலீஸார் முன்னெச்சரிக்கை யாகவே வந்திருந்தனர். ஆகவே கல்லும், கம்பும் கொண்டு தாக்கப்பட்டவுடனே போலீஸார் கூட்டத் தைக் கலைந்து போகுமாறு கூச்சலிட்டனர், காலிகளை தடியால் அடித்துக் கலைக்கப் பெரிதும் முயன்றனர். கைகளிலே கற்களையும், கம்புகளையும் வைத்திருந்தவர் களையும், கலகத்திற்குக் காரணமானவர்களையும் தடி யடி தந்து கைது செய்து கலகத்தை அடக்கவேண்டிய அவசியம் ஏற்பட்டுவிட்டது போலீஸாருக்கும், ரிஸர்வ் படையினருக்கும். இந்தக் கலகக்காரர்கள் எட்டு போலீ ஸாருக்கும் காயம் ஏற்படுத்திவிட்டார்கள்.

கைது செய்யப்பட்டவர்களில் தமிழ் மாகாண காங் கிரஸ் கமிட்டி மெம்பரும் மதுரை ஜில்லா போர்டு தலை வருமான, திரு N. R. தியாகராஜன் அவர்களும் ஒரு வர். அவரும் சாதாரணமாக போலீஸ் லாரியில் ஏற வில்லை. இரண்டொரு அடி வாங்கிய பின்னரே போலீஸ் லாரியில் ஏறினார். இன்னும் மாஜி எம். எல். ஏ. ஒருவரும் மற்றும் பல காங்கிரஸ் பணக்காரத் தியா ம் அடி உதைபட்டு போலீஸ் லாரியில் ஏற்றப்பட்

டனர் என்றால் அந்த கலகம் எப்படி இருந்திருக்கும் என்பதை தோழர்கள் சற்று கண்ணை மூடிக்கொண்டு சிந்தித்துப் பார்க்கவேண்டும்.

பகல் 3-30 மணிக்கு அந்த இடத்தில் மனித நடமாட்டமே இல்லை. பொது மக்களுக்குப் புதிய புதிய விஷயங்களை விளக்கவேண்டும், என்ற நல்லெண்ணத்தை கொண்டு வந்த அந்தப் பெரும் பேச்சாளர் ஓட்டலிலே தங்கி இருக்கவேண்டி வந்தது.

இரவு மணி ஏழுவரையில் அவர் அந்த ஓட்டலில் தங்கியிருந்துவிட்டு அதன் பின்னர் கூட்டம் கூட்டியவர்களால் அவர் ஒரு டி. வி. எஸ். பஸ்ஸில் ஏற்றப்பட்டு அந்த இடத்தை விட்டு நீங்கி ஆண்டிப்பட்டி என்னும் ஊர்போய்ச் சேர்ந்தார். ஆம்! தலை தப்பி வந்தார். அவர்தான் தோழர் இர. நெடுஞ்செழியன் அவர்கள்.

ஆம்! கிழவனை வாலிபனுக்கும் வகையில் வீரவுரையாற்றும் தோழர் நெடுஞ்செழியன் அவர்களைத்தான் கலகக்காரர்கள் தொலைத்துவிட முயற்சி செய்தனர். கலகக்காரர்கள் என்று கூறுவதைவிட காங்கிரஸ்காரர்கள் முயன்றார்கள் என்பதே பொருந்தும்.

தான் பிறந்த நாட்டில், தன் மனதிலே எழும் உண்மைகளை எடுத்துக் கூறும் அளவுக்கு பேச்சுரிமையை வழங்க மறுக்கிறது இந்நாடும், நாடாள்வோரும், நாடாளும் கட்சியும். இந்தச் சூழ்நிலையில் இருந்துகொண்டே பணியாற்றிவருகின்றனர் முன்னணி வீரர்கள்—அந்த வீரர்களின் முதல் வரிசையைச் சார்ந்தவர் தோழர் நெடுஞ்செழியன்.

மேற்குறித்த சம்பவம் எங்கே நடைபெற்றது? என்று நடைபெற்றது என்பது தெரியவேண்டுமல்லவா? படியுங்கள்.

மதுரை மாவட்டத்தைச் சேர்ந்த ஓர் இடம். மதுரையில் இருந்து ஏறக்குறைய 46 கல் தூரத்தில் இருக்கும் ஒரு பேரூர். வியாபாரத்தில் சிறந்த ஊர். அங்கே காங்கிரஸ்காரர்கள்தான் அதிக செல்வாக்குடன் இருப்பதாகச் சொல்லிக்கொண்டனர். அத்துடன் காங்கிரஸ் ஒன்றைத் தவிர மற்ற கட்சிகள் அங்கே தலைகாட்ட முடியாதபடி பாதுகாத்து வந்தனர் காங்கிரஸ் பக்தர்கள். வேறு கட்சியோ கழகமோ ஏற்பட்டால் அதனை ஒழித்துக்கட்ட எந்தவிதமான மோசமான வழியைக் கையாண்டாகிலும் தடுத்து விடுவார்கள் அந்த அகிம்ஸா மூர்த்தியின் சீடர்கள். இவ்விதமான சிறப்புகளுடன் விளங்கும் ஊரைத் தேனி என்று அழைத்து வந்தனர்.

இந்த ஊரில் காங்கிரஸின் செல்வாக்கு மங்கி திராவிடர் இயக்கக் கொள்கை ஒளிவிட்டுப் பிரகாசிக்கும் சமயம் 1951—ல் ஏற்பட்டுவிட்டது.

அதன் காரணமாக அங்கே ஓர் தி. மு. கழகமும் தோற்றுவிக்கப் பட்டது. அந்தக் கழகத்தால் 4—7—51 அன்று மாலை 6 மணிக்கு ஓர் பொதுக்கூட்டம் கூட்ட ஏற்பாடு செய்யப் பட்டிருந்தது. அதில் தோழர் நெடுஞ்செழியன் அவர்கள் பேசுவதாக ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. அதற்கான எல்லா உத்தரவுகளும் முறைப்படி அதிகாரிகளிடமிருந்து பல தினங்களுக்கு முன்னரே வாங்கப்பட்டு விட்டது.

ஆனல் இந்த கூட்டத்தைக் கலேக்கவும், கழக வீரர்களேயும், தோழர் நெடுஞ்செழியனேயும் அடித்து துன்புறுத்த — கலகம் விளேவிக்கக் — காலித்தனம் செய்ய—திர்மானித்த காங்கிரஸ் காரர்கள்—எங்கு என்று தி. மு. க. தோழர்கள் கூட்டம் நடத்த ஏற்பாடு செய்திருந்தனரோ அங்கு, தாங்களும் கூட்டம் போட வேண்டும் என்று அனுமதி கேட்டனர்.

அதிகாரிகள் ஒரே இடத்தில் ஒரே நேரத்தில் இரு கூட்டங்களுக்கு அனுமதி தர முடியாது என்று மறுத்தனர். விடுவார்களா காங்கிரஸ்காரர்கள்? அதிகாரிகளேத் துளேத்துத் தொல்லே கொடுத்தனர். அதனுல் அதிகாரிகள் கழகத் தோழர்களிடம் அந்தக் கூட்டத்தை பகல் இரண்டு மணியிலிருந்து 4—30 மணிக்குள் நடத்திவிட வேண்டும் என்று கேட்டுக் கொண்டனர். தி. மு. க. தோழர்கள் அவர் வேண்டுகோளே ஏற்றுக் கொண்டனர். அதன் பிறகு காங்கிரஸ் காரர்கள் மாலே 6 மணிக்கு கூட்டம் நடத்த அனுமதி பெற்றனர்.

இருந்தும் கழக மேடைக்குப் பக்கலில் காங்கிரஸ் மேடை அமைத்தனர். 6 மணிக்கு கூட்டம் என்ருல் பகல் 12 மணிக்கே மேடைக்கு வந்து கலவரம் செய்தனர் கூட்டம் நடை பெற இருக்கும் நாளுக்கு முன்னரே— கத்தியும், கம்புகளும் ஏராளமாகக் கொண்டு வந்து வைத்துக் கொண்டனர் காங்கிரஸ்காரர்கள்.

இவ்விதம் நிகழும் என்று உணர்ந்த அதிகாரிகளும் போலீஸ்—ரிசர்வ் படை முதலியவைகளேயும் தயாராக வைத்துக் கொண்டனர். அதன் பிறகு கூட்டம் நடை

பெறும் நாள் அன்று தோழர் நெடுஞ்செழியன் வந்து சேர்ந்தார். அவரைக் கழகத் தோழர்கள் வரவேற்றனர். அங்கு நடைபெற்ற சம்பவங்களை விளக்கினர். தோழர் நெடுஞ்செழியன் அவர்களும் எதையும் தாங்கும் இதயம் உண்டு என்ற அண்ணாவின் அறிவுரையை மனதிலே கொண்டு கூட்டம் நடைபெற இருக்கும் இடத்தை நோக்கி நடந்தார். அவர் மேடைக்கு அருகில் சென்ற போது தான் முதலில் குறிப்பிட்டபடி தேனிக் காங்கிரஸ் காலிகள், குண்டர்கள், இருதயமற்றவர்கள் தோழர் நெடுஞ்செழியனின் தலையை நசுக்க முயன்று தோற்றனர்.

இவ்விதமான பேராபத்துகளை தாண்டி கொண்டே திராவிடம் முழுவதும் பிரச்சாரம் செய்து வரும் ஓர் பெரும் பேச்சாளர் அண்ணாவின் அருமைத் தம்பிகளில் ஒருவர் நமது மதிப்பிற்குரிய தோழர் நெடுஞ்செழியன்.

* * *

தோழர் நெடுஞ்செழியன் அவர்களுடைய வாழ்க்கை வரலாற்றை மிகவும் சுருக்கமாக எழுதிக் காட்டிவிடலாம் அவருடைய அகவாழ்வில் ருசிகரமான சம்பவங்கள் இருக்கலாம், இல்லாமலும் இருக்கலாம் ஆனால் அதனை நாம் தெரிந்து கொள்வதைவிட புற வாழ்வில்—பொதுப் பணியில் அவருடைய உழைப்பு — ஆர்வம் எப்படிப் பட்டது? என்பதனை நாம் தெரிந்து கொள்ள வேண்டும். ஆகவேதான் தேனி சம்பவம் ஒன்றை மட்டும் உங்களுக்கு நினைவூட்ட நினைத்தேன்.

தோழர் நெடுஞ்செழியன் ஒரு நடமாடும் பல்கலைக் கழகம். அந்த பல்கலைக் கழகம் பல மக்களுக்கு

அறிவாளி என்ற பட்டம் தந்திருக்கிறது அந்தப் பல்கலைக் கழகம் எவ்வளவோ நன்மைகளை நாட்டிற்கு செய்திருக்கிறது. அறிவற்ற மக்கள் வாழும் இடங்களுக்குச் சென்று பகுத்தறிவைப் பரப்பி இருக்கிறது. வீணர்களைத் திருத்தி வீரர்களாக்கி இருக்கிறது. சோம்பேறிகளை வீரர்களாக்கி இருக்கிறது. பெண்களுக்கு சமத்துவம் பற்றிய போதனை செய்திருக்கிறது. திராவிட நாட்டினை திராவிடருக்கே ஆக்கும் அரும்பணியை மேற்கொண்டிருக்கிறது.

தோழர் நெடுஞ்செழியன் எங்கே பிறந்தார்? வளர்ந்தார் அன்னையார் பெயரென்ன? தகப்பனர் யார்? என்ற சில குறிப்புகளை எழுதினுல்தானே வரலாறு என்று கருதப்படுகிறது இன்று. ஆகவே அதனை இங்கே குறிப்பிடுகின்றோம்.

திருச்சி மாவட்டைத்தை சேர்ந்த திருக்கண்ணபுரம் என்னும் ஊரில் 11—7—1920 அன்று பிறந்தார் தோழர் நெடுஞ்செழியன். தோழர் ச. இராசகோபாலர் அவர்களை 'அப்பா' என்றும் தோழியர் மீனுட்சி சுந்தரம் அம்மையாரை 'அம்மா' என்றும் அழைக்கும் உரிமை பெற்றுர்.

சின்னஞ் சிறு வயதில் சிறப்புடன் வளர்ந்தார் பள்ளி பயிலும் காலத்தில் ஒழுங்காக—முறையாகப் படித்தார்.

பட்டுக்கோட்டை போர்டு ஹைஸ்கூலில் படித்தார் உயர்நிலைப் பள்ளிப் படிப்பு முடிந்தவுடன் சிதம்பரத்தில் உள்ள அண்ணமலைப் பல்கலைக் கழகத்தில் கல்லூரி படிப்பைத் துவங்கினுர்.

1944-ல் **M. A.** பட்டம் பெற்ருர். இவர் கல்லூரியில் இருந்த போதே இயக்கப் பற்று கொண்டார் அங்கு பேச்சு மேடைகளில் முதலில் ஏறிப் பேச சற்றுத் தயங்கினுலும், பின்னர் தைரியமாகப் பேச முன் வந்தார் அவர் வயல் வெளிகளில் பேசிப் பேசிப் பழகி சிறந்த தொரு பேச்சாளராகினுர் என்று சொல்லப் படுகிறது.

தோழர் நெடுஞ்செழியனுக்கு மூன்று சகோதரர் களும், நான்கு சகோதரிகளும் உண்டு.

தோழர் நெடுஞ்செழியன் அவர்களைக் கணவராக அடையும் வாய்ப்பு டாக்டர், ஆர். விசாலாட்சி (எம். பி. பி. எஸ், டி. எம். சி. ஹச்) அவர்களுக்கே கிடைத்தது.

இந்த இளம் தம்பதிகள் இல்லறம் இனிது நடத்தி அதன் பயனுக மதிவாணன் என்ற ஓர் ஆண் குழந்தை யைப் பெற்றெடுத்தனர்.

தோழர் நெடுஞ்செழியனின் பேச்சைக் கேட்காத இடமும், தி. மு. க. தோழர்களும் இருக்கமாட்டார்கள். இயக்க வளர்ச்சிக்காக பாடு படும் உண்மையாளர்; இயக்கத்திற்கு உயிர் போன்ருர் இத்தகைய பெருந் தகையாளரைத் தான் இன்று அரசாங்கம் குற்றவாளி என்று குற்றம் சாட்டி சிறைக்குள்ளே அடைத்து வைத்திருக்கிறது. அறிஞர் அண்ணு அவர்களுடன் இன்று சிறையிலே வாடுகிருர்.

தோழர் நெடுஞ்செழியன் பெரியார் இராமசாமி அவர்களுடன் பிரச்சாரத்திற்குச் சென்றுள்ளார். பெரி

யார் திருமணத்திற்குப் பின் தி. மு. கழகத்தில் அண்ணு வின் தலைமையில் பணியாற்றிவருகிருர்.

திராவிட முன்னேற்றக் கழகப் பிரச்சாரக் குழு செயலாளராகப் பணியாற்றி இருக்கிருர். 1949—ம் ஆண்டு செப்டம்பரில் இருந்து 1950—ம் ஆண்டு செப்டம்பர் வரையில் அவர் ஆற்றிய பணியும், பிரச்சாரம் வெற்றி பெற்ற விபரங்களையும், தோழர் நெடுஞ்செழியன் அவர்களே கூறுகிருர் கேளுங்கள்.

"கொள்கைகளோ காற்றில் பறக்கவிடப்பட்டன; தொண்டர்களோ துரோகமிழைக்கப்பட்டார்கள்; உழைப்பாளிகளோ உதாசீனம் செய்யப்பட்டார்கள்; உண்மை உறுப்பினர்களோ அவநம்பிக்கைக்குள்ளாக்கப்பட்டனர்; யதேச்சாதிகார பாசிஸ வெறி மனப்பான்மையோ தலைமையிடத்தில் தாண்டவம் ஆடிற்று; இயக்கமோ சதிக்குள்ளாக்கப்பட்டுக் கிடந்தது.

இப்படிப்பட்ட கொடுமையான நெருக்கடி நிலைமை, சென்ற ஓராண்டு காலத்திற்கு முன்பு நாம் வாழ்ந்த இயக்கத்திலே ஏற்பட்டது! அந்த நிலைமையை நினைக்க, இப்பொழுதுகூட நெஞ்சு வேகிறது!

எதிர்க்கட்சியினர் எக்கொலி கொட்டி நகைத்தனர்; கேலி பேசினர்; கிண்டல் செய்தனர்!

தூய்மை உள்ளம் படைத்தோராகிய நாம், இயக்கத்தைச் சீர்கேடுகள் அண்டாவண்ணம் தடுத்துக்காக்க, நேரிய சீரிய முயற்சிகள் பலவற்றை மேற்கொண்டோம். ஆணவ யதேச்சாதிகாரம் அத்துமீறி தலைமை

பிடத்தில் தாண்டவமாடியதால், நமது முயற்சிகள் பலன் படாமற்போயிற்று.

இறுதியில் கொள்கைகளைக் காப்பாற்றுவதற்கான கண்ணியமான வழி "திராவிட முன்னேற்றக் கழகம்" காணுவதைத்தவிர வேறில்லை என்ற முடிவுக்குத் தூய்மையுள்ளம் படைத்த உண்மை உழைப்பாளிகளாகிய நாம் வந்தோம் என்பதை நாடு நன்கறியும், தெளிவறியுடையோர் தீர உணருவார்கள்!

தூய்மை உள்ளம், உண்மை உழைப்பு, நேர்மைப் போக்கு, நீதிமுறை ஆகிய அடிப்படைகளின்மீது, திராவிட முன்னேற்றக் கழகம் கட்டப்பட்டு வளர்ந்து வந்ததால், அது சென்ற ஓர் ஆண்டு காலத்திற்குள்ளாக அன்பும், அழகும், வனப்பும், வளமும், அறிவும், ஆற்றலும் பெற அரும் மகவாய்த் திகழ்கிறது. அதன் வளர்ச்சியைக் கண்டும், அதன் பேச்சு மொழியைக்கண்டும், அதன் அருந்திறனைக் கண்டும் பொறுமைப்படுவோரும், புலம்பியழுவோரும், இல்லாததையும் பொல்லாததையும் கூறி வயிற்றெரிச்சல்படுவோரும், ஏதேதோ உளறிக்கொட்டுபவரும், நாட்டில் இல்லாமலில்லை. அவர்கள், ஏதேதோ எதிர்பார்த்து ஏமாந்தவர்கள்,—எனவே ஏதேதோ புலம்புகிறார்கள், பரிதாபத்துக்குரியவர்கள்!

கழக வளர்ச்சிக்கு உறுதுணையாக இருந்துவரும் சாதனங்களிலே முக்கியமானதும், முதன்மையானதும் கழகப் பிரச்சாரக் குழுவாகும்.

சென்ற ஓராண்டு காலத்தில் பிரச்சாரக் குழு ஆற்றிய அருஞ்செயல்கள் அளவிடற்கரியனவாகும்.

திராவிட முன்னேற்றக் கழகம்—அந்தப் பகுத்தறிவுப் பண்ணை, திராவிடத்தின் நாடு, நகரங்கள், பட்டி தொட்டிகளிலெல்லாம் நிறுவப்பட்டுவிட்டது. பிரசாரக் குழுவினராகிய சொல்லேருழவர்கள் கருத்து விதைகளை ஏந்திச் சென்று, மக்களின் உள்ளக் கழனியிலே விதைத்து வருகிறார்கள். பகுத்தறிவுப் பயிர்கள் வளர்க்கப்பட்டிருக்கும் கழனிகள், இலட்சக்கணக்கிலே பெருகி விட்டன என்று அறியும்போது, உழவர்கள் மகிழாமல் இருக்க முடியாதல்லவா! அந்த மகிழ்ச்சி வெள்ளத்தைத்தான் இந்த ஓராண்டு நிறைவு விழாவின் போது, கழகத் தோழர்களாகிய பண்ணையினருக்குக் காணிக்கையாகப் பிரசாரக் குழுச் செயலாளன் என்ற முறையில் செலுத்துகிறேன்.

கழகத்தின் பிரசாரகர்கள் மிக மிகக் குறைவு—என்றாலும், கழகத்தின் எக்காள ஒலி, நாட்டின் மூலை முடுக்குகளிலெல்லாம் அன்றாடம் கேட்டுக்கொண்டே இருக்கிறது.

பிரச்சாரகர்களிலே முழு நேரத் தொண்டர்கள் யாரும் கிடையாது—என்றாலும், கழகக் கருத்து விதைகள் எங்கணும் எப்பொழுதும் தெளிக்கப்பட்டுக்கொண்டேயிருக்கின்றன!

பண பலமற்ற மிகச்சிறிய நமது பிரசாரப் படை அரசாங்கத்தின் அடக்கு முறைகளைத் தகர்த்தெறிகிறது; ஆணவக்காரர்களின் ஆதிக்கத்தை அழிய வைக்கிறது; இருண்ட நாட்டிலே அறிவு ஒளிக் கதிர்களை எட்டினமட்டும் ஊடுருவி பாயச் செய்திருக்கிறது; எதிர்க்

கட்சியினர் கொடுக்கும் தொல்லைகளைச் சமாளித்து, கல்லடி, சொல்லடி, வசையடி, சாணியடி ஆகியவற்றைத் தாங்கி, தன் தடந்தோள்களால் உதிர்த்துத்தள்ளி, கடு வேகமாக முன்னேறிவருகிறது; பொறாமையின் விளைவால், மனப் புகைச்சலின் காரணமாகக் குரைத்துக் கொண்டிருப்போரை அலட்சியம் செய்துவிட்டுத் தன் வழியிலே கண்ணுங்கருத்துமாகச் சென்றுகொண்டிருக்கும் கண்ணியப் படையாக இருந்துவருகிறது. "இப்படை தோற்கின் எப்படை ஜெயிக்கும்" என்ற வீரவுரை முழங்கி நாடெங்கும் வெற்றி வலம் வந்துகொண்டிருக்கிறது.

கழகப் பிரச்சாரப் படை மிகச் சிறிது—என்றாலும் கல்லையும் தகர்த்தெறியும் சிற்றுளியாக இருந்து வருகிறது.

வற்றா அன்பும் ஆர்வமும், ஊக்கமும், உறுதியும், நேர்மையும், நீதியும், பற்றும், பண்பும் கொண்டு தம் ஓய்வு நேரத்தில் ஈடுபட்டுவரும் பிரசாரக் குழு உறுப்பினர்கள் அனைவர்க்கும், இந்த நல்ல வாய்ப்பிலே, செயலாளன் என்ற முறையில் நன்றியறிதலைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பொதுக்கூட்டம், ஊர்வலம், மாநாடு, இசையரங்கு, நாடகம், அறிக்கை, புத்தகம், பத்திரிகை ஆகியவற்றின் மூலமாகக் கழகப் பிரச்சாரம், நல்ல முறையிலே நடந்து வருகிறது—என்றாலும் அவற்றின் அளவும், தொகையும் குறைவு; மேன்மேலும் பெருகவேண்டும்; பெருக்க வேண்டிய பொறுப்பு கழகத் தோழர்களனைவருடைய தாகும்.

கழகப் பிரச்சாரகர்களும், கழக அமைப்பாளர்களும் நல்லமுறையிலே நட்புறவுகொண்டு, கழகப் பிரச்சாரத்தை மேன்மேலும் ஊக்குவிக்கவும், உயர் வாக்கவும், பரப்புவிக்கவும், பயன்படவைக்கவும், நல்ல முறையிலே முயலவேண்டும் என்பதை அன்னார்களுக்கு நினைவுறுத்திக் கொள்ள விரும்புகிறேன்.

கழகமாகிய மரத்தை நிலை நிறுத்துவது ஆணிவேராகிய அமைப்பு முறை என்றால் கழகத்திற்கு உணவூட்டுவது இலைகளோடு கூடிய மரக்கிளையாகிய பிரச்சாரமாகும்.

பிரச்சாரம் கழகத்திகு உணவு கொடுக்கிறது—உயிர் கொடுக்கிறது.

இருக்கும் பிரச்சாரகர்களைப்போல மேன்மேலும் நமக்குப் பிரச்சாரகர்கள் தேவை. அவர்களை உற்பத்தியாக்கும் முயற்சிகளைக் கடைபிடிக்கவேண்டியது கழகத் தோழர்களின் இன்றியமையாக் கடமையாகும்.

கழகப் பிரசாரகர்களின் கையிலே காணப்படும் பகுத்தறிவு வாள்கள், அண்ணா அவர்களின் உள்ள உலைக்களத்திலே தயாரிக்கப்பட்டு வடித்தெடுக்கப்பட்டவையாதலால், அவை என்றும், எங்கும் வெற்றி வாள்களாகவேதான் திகழும் ஆகவேதான் திராவிட முன்னேற்றக் கழகப் பிரச்சாரகர்கள் திராவிடத்தின் இருளைப் போக்கும் தீரர்களாக இருக்கிறார்கள். வாழ்க அவர்கள் உள்ளம்! வளர்க அவர்கள் முயற்சி!! திராவிட நாடு திராவிடருக்கே!!!"

இவ்விதமாக நல்ல விஷய விளக்கங்களை எடுத்துக் கூறும் இயல்பும் பரந்த நோக்கமும் விரிந்த மனப்பான்மையும் நிரம்பிய தோழர் நெடுஞ்செழியன் மிக விரைவில் சிறையிலிருந்து வெளிவந்து நாட்டின் நன்மைக்காக உழைக்கப் போகிறார்.

தோழர் நெடுஞ்செழியன் அவர்கள் பேச்சாளர்—சிறந்த எழுத்தாளர்—நடிகர், அதுமட்டுமல்ல பேச்சாளர்களுக்கு ஆசிரியர், எழுத்தாளர்களுக்கு வழிகாட்டி. அவர் பேசும் பாணி யாரிடமிருந்தும் இரவல் வாங்கியதல்ல, புதிய பாணி, பலர் பின்பற்ற ஆசைப்படும் பாணி! அவர் பேச்சின் இறுதியில் புரட்சி கவிஞர் பாரதிதாசன் அவர்களின் கவிதைகளில் ஒன்றை எடுத்து கூறி முடிக்கும் போக்கே ஓர் அலாதியானது.

ஏழை யெளியவர்களின் நண்பர்; பழைமையின் பயங்கரப் பகைவர். இனிய தன்மையும் இணையிலா வீரமும் உடையவர்; அண்ணாவின் அருமைத் தம்பிமார்களில் ஒருவர். தோழர் நெடுஞ்செழியன்!

வாழ்க திராவிடம்!

# நடராஜன்

சென்னை கடற்கரையில் வெள்ளம்போல் மக்கள் கூடியிருக்கின்றனர். ஆம் எங்கும் ஒலி பெருக்கி வைக்கப்பட்டிருக்கின்றன. மேடைஒன்றும் அழகாக அமைக்கப்பட்டிருக்கிறது. அந்தப் பெருங் கூட்டத்திற்கு இன்றைய முதலமைச்சர் ஆச்சாரியார் தலைமை தாங்கினர். அந்தக் கூட்டத்தில் அன்றைய சிறந்த பேச்சாளராகிய தோழர் S. சத்திய மூர்த்தி அவர்கள் பேச இருக்கிருர்.

கூட்டம் கடல்போல் திரண்டிருக்கிறது. பேச்சும் ஆரம்பமாயிற்று. இது என்ன கூட்டம் என்று தெரியவில்லை யல்லவா? காங்கிரஸ் கூட்டம். அன்று காங்கிரஸ் நல்ல ஆதரவுடன் இருந்த காலம் ஆகவே கூட்டம் ஏராளம்.

கூட்டம் நிகழ்ந்து கொண்டே யிருக்கிறது. ஒரு மனிதர் ஆம் ஒல்லியான பேர்வழி; சாதாரண தோற்றம் அவரும் கதருடையைத்தான் அணிந்திருந்தார். காந்தி பக்தர் என்பதில் சந்தேகமில்லை. அவரும் ஒரு காங்கிரஸ் சங்கத்திற் செயலாளர்தான். அந்த மேடையில் அமர்ந்திருந்தார்.

அவர் முகத்திலே அமைதியில்லை; எதையோ நினைத்து ஆத்திரப் பட்டுக் கொண்டிருந்தார். என்னமோ நினைத்தார். ஒரு துண்டு தாளில் ஏதோ எழுதினர். அந்தக் கூட்டத் தலைவரான C. R. இராஜகோபா

லாச்சாரியார் அவர்களிடம் முறைப்படி கொடுத்தார். அதை பிரித்துப் பார்த்தார் C. R. அதில் தோழர் சத்திய மூர்த்தி செய்த துரோகத்தை விளக்கி யிருந் தார். அதற்கு சரியான விளக்கம் தேவை என்று கேள்வி கேட்டிருந்தார். இதனைப் படித்த C. R. அந்தத் தோழரை அருகில் அழைத்து

" தனியாக பதில் சொல்லுகிறேன் " என்றார்.

"எனக்குப் பதில் தேவையில்லை. பொதுமக்க ளுக்கு உண்மை தெரிய வேண்டும்" என்றார் அவர்.

ஆனால் C. R. அவர்கள் அந்தக் கேள்வித் தாளில் இருந்த வார்த்தைகளை கேலி செய்தார். அது கண்டு பொறாத அந்த இளைஞர் "நீங்கள் இந்தக் கேள்விக்கு நாணயமாக பதில் சொல்லுகிறீர்களா அல்லது நானே பேசவேண்டுமா?" என்று கூறி எழுந்தார்.

அப்போது அவரை தோழர்கள், சத்திய மூர்த்தி, T. செங்கல்வராயன், கோபாலரத்தினம், போன்றவர் களும் பல பார்ப்பன ரிப்போர்டர்களும் சமாதானப் படுத்தி உட்காருமாறு வேண்டினர்.

மேடையின் மீது இவ்வாறு நிதழ்ந்தால் கூடி யிருந்த மக்கள் சும்மா இருப்பார்களா? கூட்டம் குழப் பம் அடைந்ததுவிட்டது. உடனே அந்தத் தோழர் எழுந்து "எதிர்க்கட்சியார் துரோகம் செய்யும்போது தொண்டை கிழியக் கத்துவதும், ஆனால் நம் கட்சித் தலைவர்கள் அதைவிட துரோகம் செய்தால் மூடுமந்தி ரம் செய்வதா? இதனை நான் ஒப்பமாட்டேன்" என்று

ஒலி பெருக்கி முன் உணர்ச்சி வயப்பட்டு முழங்கினர். சத்திய மூர்த்தி அவர்கள் செய்த துரோகத்தை எடுத்து விளக்கிக் காட்டினர். மறுபடியும் இவ்விதமான தவறு தல்களை செய்யாமல் தலைவர்கள் சாக்கிரதையாக நடக்க வேண்டும் என்று எச்சரித்தார்.

மேலும் பேசாதபடி ராஜாஜி அவர்கள் எழுந்து கூட்டத்தை கலைப்பதாகக் கூறினர்.

அதன் பிறகு அந்த இளைஞரை அழைத்து

"தம்பி இன்று கூட்டம் இந்த நிலையில் முடிவடைந் தாலும் அதைப்பற்றி நான் கவலைப்படவில்லை. ஆனல் உன்னுடைய அஞ்சாநெஞ்சை நான் மெச்சுகின்றேன். உனக்கு உன் கடமையின் மீது இருந்த ஆர்வத்தால் நீ செய்த பணியை நான் பாராட்டுகின்றேன். இவைக ளால் உன் மீது முதலில் எழுந்த கோபத்தையும் மறந்து விடுகிறேன் என்று கூறினர்.

இவ்விதமாக அந்த கூட்டம் கலைந்தது.

சத்திய மூர்த்தியார் செய்த துரோகம் என்ன? யார் அந்த அஞ்சா நெஞ்சினர்? என்று தெரிய வேண்டு மல்லவா?

தோழர் சத்தியமூர்த்தி அவர்கள் அரசியலிலே கலந்து பணியாற்றி பதவி வகித்த காலத்தில் டில்லி சட்டசபையில் "மோசடி மசோதா" கொண்டு வரப்பட் டது. அந்த மசோதா முதலாளிகளுக்கு ஆக்கம் தரும் வகையில் சட்டம் வகுக்கப்பட்டது. ஆகவே அதனைத்

தடுக்கவேண்டும் என்று அன்றைய எதிர்க்கட்சித் தலைவரான சத்திய மூர்த்தி போன்றவர்கள் வன்மையாகக் கண்டித்தனர். இதனைக் கேட்ட தொழிலாளர்கள் சார்பில் நின்று எதிர்க்கப் போவதாக எடுத்துக் கூறினர் வெளியில்.

ஆனல் கடைசியில் அந்த மசோதா ஓட்டுக்கு விடப்பட்ட நாளன்று வெளியிலே பேசிய சத்தியமூர்த்தி ஐயரும், மற்ற தேசீயத் தோழர்களும் சட்டசபையில் ஆஜராகவில்லை. இதனல் முதலாளிகளுக்குச் சாதகமாக அந்த மசோதா நிறைவேற்றப்பட்டது.

இந்த தேசீயத் தலைவர்களின் துரோகத்தை நீதிக் கட்சியினர் கண்டித்தனர். இதில் பெரும் பங்கு நமது அறிஞர் அண்ணு, அவர்களையும் தோழர் K. M. பால சுப்பிரயணியம் அவர்களையும் சேரும்.

இந்த விதமாக துரோகச் செயலைத்தான் அன்று கடற்கரையில் அந்த தோழர் தேசீயவாதி அம்பலப் படுத்தினுர். கூட்டம் குழப்பத்தில் முடிந்தது.

அத்தகைய உண்மையின் நண்பர் யார்? கடமை வீரர் பெயர் என்ன? உண்மையான அந்த தேசியவாதி தான். இன்று தென்னுட்டின் மிகப் பெரிய இயக்கமான திராவிட முன்னேற்றக் கழகத்தின் உயிர் நாடிகளில் ஒருவர்—ஓயாமல் உழைக்கும் உண்மைத் தொண்டார்களில் ஒருவர் 'என் தம்பி' என்று அண்ணு தன் மொழியில் கூறும் தன்மை பெற்றவர். இன்று கூட நாட்டின் நன்மைக்காகப் பாடுபட்டு, அறிஞர் அண்ணுவுடன் சிறையிலே அடைபட்டுக் கிடக்கும் தீரர் **N. V.**

நடராஜன் அவர்கள். ஆம்! திராவிடன் ஆசிரியர் தோழர் N. V. N. அவர்களே.

* * *

தி. மு. கழக முன்னணிவீரர்களில் ஒருவராகிய தோழர் நடராஜன் அவர்களுடைய பிறப்பு வளர்ப்பைப் பற்றியும் அவராற்றிய தொண்டைப் பற்றியும் நமக்குத் தெரிந்த வரையில் ஆராய்வோம்.

1912-ஆம் ஆண்டு மே மாதம் பிறந்தார் தோழர் நடராஜன் அவர்கள். அவருடைய தந்தையார் என். விஜயரங்கம். தாயார் பெயர் தனலட்சுமி அம்மையார். செங்கற்பட்டு மாவட்டத்தைச் சார்ந்த பொன்னேரி தாலுக்கா ஞாயிறு என்றும் சிறு கிராமத்தில் பிறந்தார். இவருக்கு இரண்டு சகோதரர்களும் ஒரு சகோதரியும் உண்டு.

இவர் பட்டம் வாங்கும் அளவுக்கு படிக்கவில்லை. ஆம் கல்லூரியில் கால் வைக்காதவர். ஆனல் நாட்டின் நன்மைக்காகப் பாடுபட்டவர். இவர் படிப்பு 5-ம் படிவம் வரையில் நீண்டு நின்றுவிட்டது.

அவர் சென்னையில் பெத்துநாயக்கன் பேட்டையில் வாழ்ந்து வந்தார். அந்தப் பேட்டையின் காங்கிரஸ் கமிட்டியில் செயலாளராகப் பணியாற்றி வந்தார். இவருடைய ஆரம்ப கட்சி காங்கிரஸ் கட்சியே யாகும். காங்கிரஸின் உண்மையான ஊழியர்களில் தோழர் நடராஜனும் ஒருவர். காங்கிரஸுக்காக இரவு பகல் என்று பாராமல் உழைத்து வந்தார். காலஞ் சென்ற தோழர் S. சத்தியமூர்த்தி, இன்று மேயர் பதவியிலிருக்கும்

தோழர் T. செங்கல்வராயன் ஆகியவர்களுடன் மிகமிக நெருங்கி தொண்டாற்றியவர். இவர் காங்கிரஸ் கட்சியில் இருந்தாலும் தொழிலாளர் முன்னேற்றத்தையே மிகவும் விரும்பி அதற்காக பாடுபட்டார்.

தொழிலாளர் பிரச்னைகளை கலந்தாலோசிக்கும் போதும், பாட்டாளி மக்களுக்கு உதவி புரியும்போதும் கட்சி வேறுபாடு கருதாது எல்லாக் கட்சித் தலைவர்களுடனும் கலந்தே பணியாற்றுவார். அந்தக் காலப் பிரமுகர்களான தோழர்கள் பி. ஆர்.கே. சர்மா, சி. பாசுதேவ், நடேசனர், தமிழ் பெரியார் திரு. வி. க. அவர்களுடன் தொடர்பு கொண்டு தொழிற் சங்கத்துறையில் நீண்ட காலம் உண்மையான பணியாற்றினர்.

1932-ஆம் ஆண்டில் சென்னை மாகாண தொழிலாளர் மாநாட்டை செயலாளராக இருந்து வெற்றிகரமாக நடத்தித் தந்தார். அந்த மாநாட்டிற்கு மாவீரர்—மறத் தமிழர்—அன்னியர் கலங்கும் வகையில் கப்பலோட்டிக் காட்டிய வ. உ. சிதம்பரனர் அவர்கள் தலைமை வகித்தார்.

1933-ஆம் ஆண்டில் தோழியர் புவனேசுவரி அம்மையை மணந்தார். கொஞ்ச காலம் ஆனந்த போதினி அலுவலகத்தில் பணியாற்றி வந்தார்.

அந்த நேரத்தில் நமது அறிஞர் அண்ணா அவர்களும் பெத்துநாயக்கன் பேட்டையில்தான் இருந்தார். ஆனல். அண்ணா நீதிகட்சியின் பக்கமும், நடராஜன் காங்கிரஸ் கட்சியின் பக்கமும் இருந்து பணியாற்றி வந்தனர்.

68254

தோழர் N. V. நடராஜன் அவர்கள் அரசியலில் அண்ணா அவர்களுடன் மாறுபட்டும், தொழிலாளர் பிரச்னையில் ஒன்றுபட்டும் பணியாற்றுவார்.

பெத்துநாயக்கன் பேட்டையில் காங்கிரஸ்கட்சிக்கும் ஜஸ்டிஸ் கட்சிக்கும் அரசியல் பேதங்கள் அதிகமாக இருந்து வந்த நேரத்திலும், காங்கிரஸ்காரர்களும், ஜஸ்டிஸ் காரர்களுப் பகல் நேரங்களில் நண்பர்களாகவும், மாலையில் மேடைகளில் ஏறினல் பெரும் போராட்டக் காரர்களாகவும் மறிவிடுவர்; இவ்விதமான அரசியல் நாகரிகம் பெத்துநாயக்கன் பேட்டையில் நிலைக்கக் காரணம், காங்கிரஸ் பக்கம் நடராஜனும் ஜஸ்டீஸ் கட்சிப் பக்கம் நமது அண்ணாவும் இருந்ததே யாகும்.

பெத்துநாயக்கன் பேட்டையைப்பற்றி ஓர் இடத்தில் "காங்கிரஸ்காரர்களுக்கும், ஜஸ்டீஸ் கட்சிக்காரர்களும் அரசியல் கொந்தளிப்பான காலங்களிலும் பகல் நேரங்களில் கொஞ்சுகிருர்கள், மாலை நேரத்தில் மேடையில் ஏறினல் அரசியல் போட்டிக் காரர்களாய் மாறி விடுகின்றனர் இதன் இரகசியம் என்னவோ!" என்று தோழர் சத்திய மூர்த்தி போன்ற தலைவர்களும் வியக்கும் வகையில் கட்சியை நடத்திவந்தார் தோழர் **N. V. N.**

1934-ஆம் ஆண்டு நடைபெற்ற முனிசிபல் தேர்தலில் பெத்துநாயக்கன் பேட்டைத் தேர்வாளர்களில் ஜஸ்டீஸ் கட்சியின் பெயரில் அறிஞர் அண்ணா அவர்கள் நின்ருர். அப்போது தோழர் **N. V.** நடராஜன் அவர்கள் அண்ணாவுக்கு எதிராக காங்கிரஸ் கட்சி தேர்வாளரை ஆதரித்துப் பிரசாரம் செய்து வந்தார்.

அறிஞர் அண்ணுவுடன் நட்பு முறையில் எவ்வளவு இனிமையாக அன்பாகப் பேசினுலும் தன் அரசியலில் அவர் கடுகளவும் விட்டுக் கொடுக்க மாட்டார். அந்த அளவுக்கு உண்மையான காதல் காங்கிரஸிடம் கொண்டிருந்தார் தோழர் **N. V. N.**

ஆச்சாரியார் முதலமைச்சராக இருந்தபோது திராவிடர்கள் மீது கட்டாய இந்தியைத் திணித்தார். அந்தச் சமயம் அந்த இந்தியை, அதுவும் கட்டாயமாகத் திணிப்பதை தோழர் நடராஜன் அவர்கள் விரும்பவில்லை. அவர் ஓர் உண்மைத் தமிழர் அன்ருே! எவ்வளவுதான் காங்கிரஸ் மீது அன்பும் பக்தியும் இருந்தாலும், தாய்மொழிக்கு இழுக்கு வரும்போது வாய்மூடி மௌனியாய் இருப்பானு உண்மைத் தமிழன்?

இந்தி இங்கு திணிக்கப்படும் தீதான திட்டத்தை தீவிரமாக எதிர்க்கவே தீர்மானித்தார். ஆகவே அவர் காங்கிரஸ் ஜில்லா கமிட்டியில் கட்டாய இந்தியை எதிர்த்து ஒரு தீர்மானத்தை கொண்டு போனுர். ஆனல் அது வெற்றி பெறவில்லை தோற்றது. ஆம்! உண்மை வெற்றி பெறவில்லை. பொய், வஞ்சகம், சூது வெற்றி பெற்றது. இந்த நிலைமையை நன்கு சிந்தித்துப் பார்த்தார். தாய்மொழிக்கு இழுக்கு—நான் பேசும் தமிழ் மொழிக்கு அழிவு—இதனை பொறுத்துக் கொண்டிருப்பதா? அது எவ்வளவு பெரிய உயர்ந்த கட்சியானுலும் சரி அதுபற்றி எனக்குக் கவலை இல்லை. தமிழுக்கு இடையூறு, அதனைத் தமிழன் தடுத்தாக வேண்டும். ஆகவே இனியும் இந்த கட்சியில் இருக்கமாட்டேன். தேவையில்லை இந்தக் காங்கிரஸ்" என்று தீர்மானித்து

விட்டார். தனது பொறுப்புகளை யெல்லாம் ராஜினமா செய்துவிட்டு காங்கிரஸுக்கு ஒரு முழுக்குப் போட்டு விட்டு அதிலிருந்து தனித் தமிழனகத் தன்மானத் தமிழனக வெளி யேறினர். அவருடன் அவரைப் போன்ற உணர்ச்சியுடைய சிலர் வெளியேறினர். அவர்களில் V. S. தேவசுந்தரம், டி. வி. முருகேசம், N. D. முத்து தில்லைராஜன் போன்றவர்களும், இன்னும் பலரும் காங்கிரஸிலிருந்து வெளியேறினர்.

இந்த நிகழ்ச்சி தமிழ்நாட்டில் பெரிய பரபரப்பை உண்டுபண்ணி விட்டது.

இந்தி தேவையில்லை என்று தோழர் நடராஜன் அவர்கள் கொண்டுவந்த தீர்மானத்திற்குப் பாதகமாக ஓட்டளித்தவர்களில் தோழர் T. செங்கல்வராயன் அவர்களும், தோழர் ம. பொ. சிவஞானம் அவர்களும் சேர்ந்திருந்தனர்.

நல்ல உழைப்பாளி—அதுவும் சலியாத உழைப்பாளி. பட்டம் பதவி ஆசைக்காக அல்லாமல் என் கடன் பணிசெய்து கிடப்பதே என்ற நல்ல பண்பாட்டை அடிப்படையாகக் கொண்டு பணிபுரியும் பண்பாளர் ஒருவரை காங்கிரஸ் இழந்துவிட்டது.

காங்கிரஸிலிருந்து வெளிவந்தவுடனே தோழர் N. V. N. இந்தி நுழையாமல் தடுக்கும் வழிவகையினை ஆராய்ந்தார். அப்போது அறிஞர் அண்ணு அவர்கள் இந்தியைத் தீவிரமாக எதிர்த்து வந்தார். அத்துடன் தோழர் N. V. N. அவர்களுடைய உண்மையான நண்

பர். ஆகவே தோழர் நடராஜன் அவர்கள் அண்ணு வுடன் சேர்ந்து பணியாற்ற தீர்மானித்தார்.

காங்கிரஸிலிருந்து ராஜினுமா செய்த அன்று மாலையிலே கடற்கரையிலே நடைபெற்ற இந்தி எதிர்ப் புக் கூட்டத்தில் பேசினுர். இந்தி எதிர்ப்பு இயக்கத்தில் சேர்ந்தார். உடனே அவருக்கு இந்தி எதிர்ப்புப் போராட்டக் கமிட்டிக்கு செயலாளர் பதவி கிடைத்தது.

1938-ஆம் ஆண்டில் பெரியார் இராமசாமி அவர்க ளுடன் நன்கு அறிமுகமானுர். தோழர் நடராஜன் அவர்களைத் தவிர அவர் குடும்பத்தினர் ஜஸ்டீஸ் கட்சி யைச் சேர்ந்தவர். அப்போதெல்லாம் தோழர் நட ராஜன் அவர்கள் தன் குடும்பத்தார் மீது அதிக அன்பு செலுத்துவதில்லை. அவர் இந்தி எதிர்ப்பு இயக்கத்தில் சேர்ந்து பணியாற்றிய பின்னர்தான் தன் குடும் பத்தினரை மிகவும் அன்போடு நேசித்தார். ஆம்! இந்தி எதிர்ப்பில் நடராசன் அவர்கள் குடும்பமே பணி யாற்றியது.

தோழர் நடராசன் அவர்கள் இந்தி எதிர்ப்புப் போரில் தீவிரமாகப் பங்கு கொண்டு பணியாற்றினுர். இந்தஎதிர்ப்புப் போரின் காரணமாக தோழர் நடராசன் அவர்களுடைய மனைவியாரும், ஆறு மாதக் குழந்தை சோமசுந்தரமும், அவரது தம்பியும், பங்காளி சகோதரி யும் ஏன் ஏறத்தாழக் குடும்பமே சிறைக்குச் சென்றது. இந்த ஒரு பெருமை தோழர் நடராசன் அவர்களுக்கு கிடைத்தது.

இந்தி எதிர்ப்பு இயக்கத்தில் பணியாற்றியபின்னர் திராவிடத் தந்தை பெரியார் இராமசாமி அவர்கள்

தலைமையில் ஜஸ்டிஸ் கட்சியில் பணியாற்றி வந்தார். அதில் மத்திய நிர்வாகக் கமிட்டியில் உறுப்பினராகப் பணியாற்றியதுடன், சென்னை ஜில்லா ஜஸ்டிஸ் கட்சியின் செயலாளராகவும் பணியாற்றினார்.

ஜஸ்டிஸ் கட்சியில் மத்திய நிர்வாகக் கமிட்டி உறுப்பினராய் இருந்த போது, மதுரையில் நிர்வாகக் கமிட்டி கூடியது. அந்த கூட்டத்தில் கட்சியின் வளர்ச்சிக்கு மாறுபட்ட விதமாய் குமார ராஜா, முத்தையா செட்டியார் நடந்தார்கள் என்பதைக் கண்டிக்க அவர் மீது நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை நடராசன் கொண்டு வந்தார். ஆனால் பெரியார் அந்தத் தீர்மானத்தை தள்ளிவிட்டார். தோழர் நடராசன் தீர்மானத்தை ஆதரித்து சௌந்திர பாண்டியனார் பெரியார் அவர்களிடம் தீவிரமாகப் பேசினார். என்றாலும் பெரியார் தலைவர் என்ற முறையில் தீர்மானத்தை தள்ளிவிட்டார்.

சேலம் மாநாட்டிற்குப் பிறகு கட்சி திராவிடக்கழகமாக மாற்றப்பட்டது. அப்போது சென்னை மாவட்ட கமிட்டி செயலாளராகவும் மண்டலக்குழு அமைப்பாளராகவும் தொடர்ந்து பல ஆண்டுகள் பணியாற்றினார்.

தோழர் நடராசன் 'விடுதலை' அலுவலகத்தில் கொஞ்ச காலம் பணியாற்றி இருக்கின்றார்.

தோழர் நடராசன் அவர்களுக்குப் பெரியார் அவர்களுடன் நெருங்கிய தொடர்பும், இயக்க நிகழ்ச்சிகளில் முக்கிய பொறுப்பும் ஏற்படச் செய்தவர் அறிஞர் அண்ணா அவர்களே ஆவர்.

தோழர் நடராசன் அவர்கள் பெரியார் அவர்களிடத்தும், அறிஞர் அண்ணா அவர்களிடத்தும் பெரும் மதிப்பும் மரியாதையும் வைத்து தம் குடும்பத் தலைவர்களாகவே கருதி வந்தார்.

பெரியார் இராமசாமி அவர்களுடன் மிகவும் இணைந்து அவர்செல்லும் இடங்களுக்கெல்லாம் சென்று தென்னாடெங்கும் சொற்பொழிவாற்றி இயக்கத்தை வளர்த்தும் பெரியாருக்குப் பெருந்துணையாகவும் ஏறக்குறைய நான்கு ஆண்டுகள் வரை ஓய்வின்றி உழைத்து வந்திருக்கிறார்.

பெரியார் — அண்ணா ஆகிய இருவர்களிடையே ஏற்படும் மனமாற்றங்கள் காரணமாக இருவருடைய மனமும் அமைதியுற்று ஒன்று சேர்ந்திருக்க வேண்டும் என்று எண்ணி அந்தமுயற்சியில் ஈடுபட்டு இருவருடைய சொல்லம்புகளையும் தாங்கிக் கொண்டவர்களில் தோழர் நடராசன் ஒருவர்.

அதன்பிறகு இரண்டாம் முறை இந்தி தமிழ் நாட்டில் புகுந்த போது நடை பெற்ற குடந்தைப் போராட்டத்தில் கலந்து கொண்டு அதன் காரணமாக இரண்டு மாதம் சிறைதண்டனையை அடைந்தார்.

ஆச்சாரியார் கவர்னர் ஜெனரலாக இருந்தபோது சென்னை வந்தார். அவருக்கு கருப்புக் கொடி காட்ட தீர்மானித்திருந்த திராவிடக் கழகத்தினரை அண்ணா, பெரியார், நடராசன் உள்பட நூற்றுக்கு மேம்பட்டவர்கள் கைதாயினர்.

பெரியார் திருமணம் காரணமாக திராவிடர்கழகத்தை விட்டு வெளியேறியவர்களில் தோழர் நடராசன் அவர்களும் ஒருவர். திராவிட முன்னேற்றக் கழகம் துவங்கியது. அறிஞர் அண்ணாவின் தலைமையில் பணியாற்றினர். தி. மு. க. வின் மாநிலஅமைப்புக்குழு செயலாளராகப் பணியாற்றினர் மாநில மாநாட்டிற்குப் பின் அமைக்கப்பட்ட தேர்தல் அமைப்புக் காரியக் கமிட்டியின் உறுப்பினராகவும் இருந்து பணியாற்றி வந்தார். அத்துடன் தேர்தல் பஞ்சாயத்துக் குழு, கழக சொத்துப் பாதுகாப்புக் குழு, அங்கத்தினராகவும் அவர் இன்று பணியாற்றி வருகிறார்.

தோழர் N. V. N. அவர்கள் பல முறை சிறை சென்றவர் சிறைக் கஞ்சாத தீரர் கள்ளுக் கடை மறியலின் போதே சிறை புகுந்த வீரர். பல தடவை 144 தடை யுத்தரவை மீறி இருக்கிறார்.

1950—ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 26-ம் நாள் குன்றத்தூரில் தடையுத்தரவை மீறி தோழர் N. V. N. பேசச் சென்ற போது வழியிலே கைது செய்யப்பட்டார் அவர் மீது வழக்குத் தொடர்ந்தன ஆம்! அன்று குன்றத்தூரில் எட்டு முறை துப்பாக்கிப் பிரயோகம் செய்யப்பட்டது 48 மணி நேரம் ஊரடங்கு சட்டம் போடப் பட்டது.

அது மட்டுமல்ல தமிழ் நாட்டிற்கு வந்த வடநாட்டு மந்திரிகளுக்குக் கருப்புக் கொடி காட்ட கழகம் தீர்மானித்த போது அதற்கு முன்னணியில் நின்று சென்னையில் பணியாற்றியும் கருப்புக் கொடி காட்டியும் கைது

செய்யப்பட்டிருக்கிறார். சிறப்பாக சென்னைக்கு இராஜ கோபாலாச்சாரியார் வந்த போது தோழர் N. V. N. கைது செய்யப்பட்டு போலீஸ்டேஷனில் வைக்கப் பட்டார். அடுத்த நாள் விடுதலை அடைந்தார். இவ்விதமாக கழகப் போராட்டங்கள் எல்லா வற்றிலும் முன்னின்று பணிபுரியும் முன்னணி வீரர் தோழர் **N. V. N.**

தோழர் **N. V.** நடராசன் அவர்கள் பேசிய மேடைகள் பல. தென்னாடு முழுவதும் அவர் பேசியிருக்கிறார். அவைகளில் சிலவற்றை இங்கே குறிப்பிடுகின்றோம்.

1950-ஆம் ஆண்டில் செப்டம்பர் 30-ம் நாள் நடைபெற்ற இராமநாதபுர மாவட்ட முதலாவது மாநாட்டிற்குத் தோழர் N. V. N. அவர்கள் தான் தலைமை ஏற்று நடத்தினார்கள். அன்று அவர் பேசிய வீரவுரை காதுகளிலே இன்னும் ஒலித்துக் கொண்டுதான் இருக்கிறது. இவ்விதமாக பல மாநாடுகள், பலப் பொதுக்கூட்டங்களில் அவர் பேசி யிருக்கிறார்.

சென்னை மாவட்ட தி. மு. கழகச் செயலாளராக இருந்து உண்மையாகவும், ஓய்வின்றியும் உழைத்து வந்த தோழர் கே. கோவிந்தசாமி அவர்கள் நோய்வாய்ப் பட்டார். அவர் ஓய்வு கொள்ள வேண்டியிருந்ததால் மறுபடியும் புதியதொரு செயலாளரைத் தேர்ந்தெடுக்க வேண்டிய அவசியமேற்பட்டது. அதன் படி தேர்வும் நடந்தது அந்தத் தேர்தலில் தோழர் **N.V.N.** அவர்களே தேர்ந்தெடுக்கப் பட்டார். அன்று முதல் சென்னை மாவட்ட செயலாளராக இருந்து வந்தார்.

அன்றியும் சென்னையில் நடைபெற்ற சென்னை மாநில முதல் மாநாட்டின் வரவேற்புக் குழுத் தலைவராக

இருந்து அவர் ஆற்றிய பணி மிகமிகப் போற்றத் தகுந்தது.

'திராவிடன்' என்ற வார இதழ் ஒன்றை வெளியிட்டும், அதன் ஆசிரியராக இருந்தும் அதனை பல தொல்லைகளுக்கிடையில் நடத்திவருகிறார். பொருள் நெருக்கடி ஏற்பட்டபோதும், தன் விடாமுயற்சியால் அதனை தொடர்ந்து நடத்திவருகிறார்.

இவ்விதமாக மிக்க கஷ்டமான நிலையில் வெளியாகிப் பணியாற்றிவரும் திராவிடனுக்கு 1950-ம் ஆண்டில் அறிஞர் அண்ணா, தோழர் சம்பத், நடிப்புப் புலவர் K. R. இராமசாமி, நடிகமணி D. V. நாராயணசாமி மற்றும் பலர் சந்திர மோகன், நாடகத்தை நடித்து அதன்மூலம் கிடைத்தப் பணத்தை திராவிடன் வளர்ச்சிக்கு உதவினார்கள்.

இத்தகு கர்ம வீரர் தோழர் N. V. N. இன்று நம்மிடமில்லை. சிறையில் தள்ளப்பட்டிருக்கிறார். நாட்டு மக்களின் நன்மைக்குப் பாடுபட்ட அவர், இன்று அறிஞர் அண்ணாவுடன் சிறை தண்டனையை அனுபவித்து வருகிறார்.

அவர் செய்த குற்றங்கள்: திராவிட முன்னேற்றக் கழகத்திற்காகப் பணிபுரிந்தது. இயக்க வளர்ச்சிக்காகப் பட்டி தொட்டிகளில் பேசியது. ஆச்சாரியார் கொண்டு வந்த புதிய கல்வி திட்டத்தை எதிர்த்தது. ரயில் நிறுத்தக் கிளர்ச்சியை ஆதரித்துப் பேசியது. டால்மியாபுரம் என்னும் பெயர் மாறி கல்லக்குடி என நிலைக்கவேண்டும் என்று கூறியது. இந்தக் குற்றங்கள் செய்ததால்

1953-ஜூலை மாதம் 13-ம் நாள் இரவு சென்னை அரசாங்கத்தால் அறிஞர் அண்ணாவும், தோழர் நடராஜனும் மற்றும் மூவரும் ஆகிய ஐவர் கைது செய்யப்பட்டு அவர்கள்மீது வழக்குத் தொடரப்பட்டு 3 மாதம் சிறை தண்டனை விதிக்கப்பட்டு அதனை அனுபவித்துக் கொண்டு வருகிறார்.

தோழர் N. V. N. சாதாரண மனிதர். ஆனால் எவ்வளவு பெரிய மனிதனாயினும் தவறு செய்தால் அதனைக் கண்டிக்கப் பயப்படாதவர். அவர் ஓர் பாட்டாளி. அதுமட்டுமல்ல பாட்டாளிகளால் போற்றப்படுபவர். எளிய பழக்கவழக்கங்களையே கையாள்பவர். ஆனால் நாட்டிற்கு நன்மை செய்யும்போது எவ்வளவு கொடிய தண்டனை வந்து குவிந்தாலும் புன்முறுவலுடன் ஏற்றுக்கொள்பவர். அவர் பணம் படைத்தவர் அல்ல; பட்டம் பெற்றவருமல்ல; நற்பண்புடையவர்; அண்ணாவின் அருமைத் தம்பிமார்களில் ஒருவர்.

திராவிட நாட்டின் விடுதலைக்காகப் பாடுபடும் முன்னணி வீரர்களில் முக்கியமானவர் தோழர் N. V. N. இத்தகைய உண்மையான வீரர். சீக்கிரம் விடுதலை அடைந்து வெளிவந்து திராவிடர் குறைகளைப் போக்க முயல்வார் என்ற நம்பிக்கை நமக்கு உண்டு.

வாழ்க N. V. N.! வளர்க அவர் தொண்டு.

---

# மதியமகன்

கன்னம் வைப்போனும் கள்ளனும், கொள்ளைக் காரனும், கொலைக்காரனும் பயமின்றி சஞ்சரிக்கும் வேளை இரவு. அதுவும் நள்ளிரவாயிருந்தால் சொல்ல வேண்டுமா?

ஒரு நாள் மேற்குறிப்பிட்டபடி இருள் சூழ்ந்து கொண்டிருந்தது. ஒரு சிலர் கையிலே கம்பும், மெய் யிலே கதர் சட்டையும், உள்ளத்திலே வஞ்சகத்தையும் சுமந்து கொண்டு செல்கின்றனர். ஆம். அவர்கள் எந் தக் கோட்டையையும் முற்றுகையிடவோ, அல்லது கள் ளர் கூட்டத்தைப் பிடிக்கவோ செல்லவில்லை. அறிவை வளர்க்கும் கல்லூரியை—கல்லூரியைச் சேர்ந்த மாண வர் விடுதியை நோக்கிச் சென்றனர்.

இருட்டு நேரம், கல்லூரி மாணவர்கள் களங்கமற்ற உள்ளத்துடன் தங்கள் தங்கள் அறைகளில் உறங்கிக் கொண்டிருந்தனர்.

அந்த அறைகளை நெருங்கிவிட்டது அந்தக் கம்பு தாங்கிய கதர்ச் சட்டைக் கூட்டம்.

"இந்த அறையா" என்றான் ஒரு முரட்டு குண் டன்.

"இல்லை. அது" என்று சுட்டிக் காட்டினான் ஒரு காங்கிரஸ் மாணவன்.

"சரி நீ அங்கேயே இரு" என்று கூறிவிட்டு அந்த அறையை நெருங்கினர் உள்ளே உறங்கிக் கிடந்த மாண வனை இழுத்துக்கொண்டுவந்தார்கள், அடித்தார்கள், பண்டங்களை சேதம் செய்தார்கள்.

அதன் பிறகு "இன்னும் எந்தந்த அறையில் அவர் கள் இருக்கின்றனர்" என்று கேட்டனர் குண்டர்கள். அந்தக் காங்கிரஸ் மாணவன் ஒவ்வொரு அறையாகச் சுட்டிக் காட்டிக்கொண்டே வந்தான். குண்டர்கள் தங் கள் திருவிளையாடல்களை நடத்திக்கொண்டே வந்தார் கள். வந்த வேலை முடிந்துவிட்டது ஓடிவிட்டார்கள் அந்த கல் நெஞ்சம் படைத்தக் காலிகள்.

இதன் விளைவு பல மாணவர்கள் மண்டைகள் உடைந்தன; எலும்புகள் நொறுங்கின; பலர் காயமுற்ற னர்.

இந்த நிகழ்ச்சி எங்கே என்று நிகழ்ந்தது என்று தெரிய வேண்டுமல்லவா?

1947—ஆம் ஆண்டில் அக்டோபர் மாதம் ஆறும் நாள் அகிம்ஸா மூர்த்தியின் சீடர்கள் ஆளும் காங்கிரஸ் ஆட்சியில், எப்போதும் ஆனந்தத் தாண்டவம் ஆடிக் கொண்யிருக்கும் ஐயன், தில்லையப்பன் வாழும் சிதம் பரத்தில் அண்ணமலைப் பல்கலைக் கழகத்தில் நடை பெற்றது.

எதற்காக? யாரால்?

திராவிடர் கழகக் கொடியொன்று கம்பீரமாகப் பறந்து கொண்டிருந்தது. அதனை தேசீய மாணவர்கள்

திருடிவிட்டனர். இதன் விளைவாக திராவிட மாணவர்களுக்கும் தேசிய மாணவர்களுக்கும் குழப்பம் ஏற்பட்டது. அடிதடி நடைபெற்றது. இத்துடன் பிரச்னை முடிவடைந்துவிட்டது. இது காலையில் நடைபெற்ற நிகழ்ச்சி!

ஆனல், அன்று இரவு தான் முன்னர் குறித்த குண்டர்கள் படையெடுப்பு நடைபெற்றது. அடிபட்டனர் திராவிட மாணவர்கள். இதற்குப் போலீசாரும் துணையாகவே யிருந்தனர்.

திராவிட மாணவர்களின் மண்டை உடைந்ததுமட்டுமல்ல அவர்கள் மீது இரண்டு வழக்குகள் தொடரப்பட்டது; அத்துடன் ஏற்கனவே காங்கிரஸ் மாணவர்களின்மீது தொடரப்பட்டிருந்த வழக்கும் வாபஸ் பெறப்பட்டது.

இந்த கலவரத்தின்போது மண்டை பிளக்கப்பட்டவரும், இந்தக் கலவரத்திற்குத் தலைவர் என்றும் குற்றம் சாட்டப்பட்டார் ஒரு மாணவர். பாவம்! அவர் மண்டை பிளந்தது. தையல் போட்டு தைக்கவேண்டிய அளவுக்கு பெரிய காயம். ஆம்! காயம் இருக்கும்வரையில் மறையாது இருந்து அடிக்கடி நினைவூட்டும் தியாகச் சின்னம். அந்த அரிய தியாகத் தழும்பை கல்லூரிப் படிப்பிலேயே பெற்றுக் கொண்ட பெரு மதிப்புடையவர்தான். இன்று மாணவர் தலைவராகத் திகழும் தோழர் K. A. மதியழகன் அவர்கள்.

தோழர் மதியழகன் மீது குற்றம் சாட்டப்பட்டு வழக்கு நடை பெற்றது. ஏறக்குறைய இரண்டு ஆண்டுகள் வரையில் மாணவர் மதியழகன் வழக்கு மன்றப்

படிக்கட்டுகளை ஏறி யிறங்கி யிருக்கிறார். இந்தச் சமயத்தில் மந்திரிகள் கூட நம் தோழர்களுக்கு எதிர்ப்பாக இருந்ததாகச் சொல்லப்படுகிறது.

தோழர் மதியழகனை அண்ணாமலைப் பல்கலைக் கழகத்திற்கு அனுப்பி பட்டம் பெற்றுவர அனுப்பினார்கள் பெற்றோர்கள். ஆனால் பட்டம் பெறுவதற்கு முன்னால் மண்டை பிளக்கப்பட்டப் புண்ணைப் பார்த்தனர்.

காங்கிரஸ் மாணவர்கள் செய்த கலகத்திற்கு தோழர் மதியழகன் தான் காரணம் என்று தொடரப் பட்ட வழக்கு அரசியல் வழக்கல்ல—கிரிமினல் வழக்காகும்.

பெற்றோர் உதவியால் வாழ்க்கையை நடத்தவேண்டிய காலம் அது. இருந்தும் தோழர் மதியழகனும் மற்ற சில தோழர்களும் வழக்கு நடத்த வேண்டிய அளவு பணமும் கொடுத்து அதனை நடத்தியே வந்தனர்.

அத்துடன் அவர் B. A. வகுப்பு பரிட்சை எழுதுவதற்கு தடைவிதிக்கப்பட்டது. இதனால் ஓராண்டு படிப்புப் பாழகியது. அதன் பின்னர் பரிட்சை எழுத அனுமதி கிடைத்தது ஒரு நிபந்தனையோடு. அதாவது பரிட்சை எழுதும் காலத்திலோ, அதற்கு முன்போ அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தின் மூன்று மைல் சுற்று வட்டாரத்திலே அவர் தங்கி யிருக்கக் கூடாது" என்பதாகும்.

என்ன செய்வது 'சரி' என்று ஒப்புக்கொண்டார்.

இதற்கு மத்தியில் வேறொரு சம்பவம் நடைபெற்றது. கவர்னர் ஜெனரல் ராஜகோபாலாச்சாரியார்

சென்னைக்கு வரும்போது கருப்புக்கொடிகாட்டப்போவதாக திராவிடர் கழகம் முடிவு செய்திருந்தது. அதன் காரணமாக சென்னையில் பெரியார் இல்லத்தில் நூற்றுக்கு மேற்பட்டவர்கள் கைது செய்யப்பட்டனர். அதில் தோழர் மதியழகனும் ஒருவர்.

B. A. பரிட்சை எழுதுவதற்கு ஒரு மாதத்திற்கு முன்னர் நடைபெற்ற நிகழ்ச்சி. இதன் காரணமாக சென்னைச் சிறையில் ஐந்து நாட்கள் இருக்க வேண்டியதாயிற்று.

அதன் பிறகு பரிட்சை எழுத சிதபரம் சென்றார். அப்போது அவர் மீது தொடரப்பட்ட வழக்கு முடிவடையவில்லை. வழக்கு அண்ணமலைப் பல்கலைக் கழகத்திலிருந்து பன்னிரண்டு மையில் தூரத்திலுள்ள பரங்கிப்பேட்டையிலே நடந்து கொண்டிருந்தது.

பாவம் அவர்பாடு மிகவும் சங்கடமாகவே யிருந்தது என்றாலும், அதற்காகக் கவலைப்படாமல் தன் காரியங்களில் ஈடுபட்டார். காலையில் பரிட்சை எழுதிவிட்டு உடனே ரயில் வண்டியில் சென்று மாலையிலே குற்றவாளிக் கூண்டில் நின்றுவிட்டு மறுநாள் மறுபடியும் பரிட்சை எழுத வேண்டியிருந்தது. பரிட்சை பதிமூன்று தினங்கள் நடந்தது. இந்த விசித்திரமான சிக்கலான கட்டத்தை மிகவும் சகிப்புத் தன்மையோடு ஏற்றுக் கொண்டார்.

இறுதியில் உண்மை வென்றது. ஆம் தோழர் மதியழகன் குற்றவாளி அல்ல எனற நல்ல தீர்ப்பு கிடைத்து விட்டது.

இவ்விதமாக காளைப் பருவத்திலேயே பெரிய கஷ்டங்களை அனுபவித்து வந்த பெரும் செயல்வீரர். இந்த வழக்கு நடை பெற்றபோது அறிஞர் அண்ணு அவர்கள் மதியழகனுக்குப் பெருந்துணையாகவும் பக்கபலமாகவும் இருந்து வந்தார் என்பது குறிப்பிடத் தக்கது.

* * *

1926-ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் ஏழாம் நாள் கோவை மாவட்டத்தைச் சார்ந்த உடுமலைப்பேட்டை வட்டாரத்தில் உள்ள கணியூர் என்ற கிராமத்திலே பிறந்தார். தோழர் மதியழகன் அவர்கள். இவருடைய தந்தையார் பெயர் அருணுசலம்; தாயார் இலக்குமி அம்மை. இவருடைய குடும்பத்தார் அனைவரும் ஏறக்குறைய நமதியக்கப் பற்றுடையவரேயாவர்.

தோழர் மதியழகன் சின்னஞ் சிறுவராக இருந்த போதே நல்ல முற்போக்கான எண்ணங்கள் அவர் மனதில் தோன்றி செயலாற்றத் தூண்டியிருக்கிறது.

கணியூர் ஆற்றின் படித்துறையில் அவர் சிறுவராக இருந்தபோது விளையாடி யிருக்கிறார். அந்தப் படித்துறையில் பார்ப்பனருக்கும் பார்ப்பனரல்லாதாருக்கும் இருக்கும் பேதத்தைக் கண்டு அந்த தீதான பேதத்தை வெறுத்தார். இதற்குத் துணை செய்யும் அன்றைய சமுதாயத்தின் ஏற்றத் தாழ்வுகளை அவர் கண்டு அதற்காக வருந்தினர்.

'விளையும் பயிர் முளையிலே' என்ற பழமொழிக்கிணங்க அவர் தன் போன்ற பல சிறுவர்களை ஒன்றுகச் சேர்த்துக் கொண்டு ஆற்றங்கரையில் நடைபெற்ற அநீதியை எதிர்த்துப் போராடினர். அந்தச் சமயத்தில்

பெரியவர்களின் முணுமுணுப்புக்கு ஆளானூர் என்ருலும் இறுதியில் வெற்றி தோழர் மதியழகனுக்கே கிடைத்தது.

பள்ளியில் படித்துக் கொண்டிருந்த காலத்திலேயே இவருக்கு இயக்க பற்று உண்டாகி அது நாளுக்கு நாள் பெருகுவதாயிற்று. 1937-ல் நடைபெற்ற இந்தி எதிர்ப்பு இயக்கத்தின் நடவடிக்கைகளை மிகவும் அக்கரையோடும் ஆர்வத்தோடும் கவனித்து வந்தார்.

1943-ம் ஆண்டில் அண்ணுமலைப் பல்கலைக் கழகத்தில் சேர்ந்தார். அங்குதான் அவர் செயல் வீரராக மாறினார். அவர் அந்தப் பல்கலைக் கழகத்தில் இருந்த வரையில் எல்லா மணவர்களுக்கும், ஏன்? இயக்கத் தோழர்கள் அனைவருக்கும் நன்ருகத் தெரிந்து மாணவர் திலகம் தோழர் மதியழகன் தான்.

அண்ணுமலைப் பல்கலைக் கழகத்தில் இருந்தபோது 1944-ஆம் ஆண்டில் கழகத் தமிழ் பேரவைத் தலைமை பதவிக்குத் தேர்தலில் நின்ருர். ஆனல் படுதோல்வி. ஆண்டுகள் நான்கு நகர்ந்தன. மறுபடியும் அதே பதவிக்கு தோழர் மதியழகன் நின்ருர். ஆனல் அவரை எதிர்த்து எவரும் நிற்கவில்லை. போட்டியின்றி தேர்ந்து எடுக்கப்பட்டார்.

1949-ல் உடுமலைப் பேட்டையில் 144 தடை வுத்தரவு விதித்திருந்தது. அதனை மீறிப் பேச பெரியார் இராமசாமி அவர்கள் சென்ருர். அவருடன் தோழர் மதியழகன் அவர்களும் சென்ருர். பெரியார் தோழர் மதியழகனை தடுத்து நிறுத்த எவ்வளவோ முயன்ருர்.

ஆனல் தோற்ருர். கடைசியில் 144 தடை யுத்தரவை மீறி தோழர் மதியழகனும் பெரியார் இராமசாமியும் கைது செய்யப்பட்டனர். அன்று இரவு முழுவதும் போலீஸ் ஸ்டேஷனிலே அடைபட்டுக் கிடந்தனர். இது தான் நமது இயக்க வரலாற்றிலேயே முதல் தடவையாக 144 ஐ எதிர்த்துச் சிறை சென்று என்பதை இங்கு சுட்டிக் காட்ட வேண்டியது அவசியமாகியது.

அதன் பிறகு பெரியார் திருமணம் காரணமாய் வெளியேறிய முன்னணி வீரர்களில் ஒருவர் தோழர் மதியழகன். அதன் பிறகு அறிஞர் அண்ணுவின் தலைமையிலே அரும் பணியாற்றி வருகின்ருர்,

திராவிட முன்னேற்றக் கழகத்தின் சட்டதிட்டக் குழுவுக்குச் செயலாளராக இருந்து பணியாற்றினர். இன்று தி. மு. க. துணைச் செயலாளராகவும் இருந்து வருகிருர்.

மாணவர் தலைவரான இவர்தான் திராவிட மாணவர் கழகத்தின் பொதுச் செயலாளர்.

இவர் ஓர் சிறந்த பேச்சாளர். இவர் பேசிய மேடைகள் பல; அத்துடன் அவர் பல நூல்களையும் எழுதியுள்ளார். அவை: (1) நன்றி யாருக்கு. (2) அறிவின் தூதர்கள் (3) அவதூறு வழக்கு. (4) திராவிட மாணவர் இயக்கம் இன்னும் பல.

தோழர் மதியழகன் திராவிட மாணவருலகத்தின் வழிகாட்டி—நல்ல சுபாவமும், நேர்மையான ஒழுக்கமும் உடையவர். இன்பம் துன்பம் இரண்டும் அவரை மயக்கவோ, வருத்தவோ, செய்யாது. தன் வாழ்க்கைப் பாதை

யில் ஏற்படும் எந்த நிகழ்ச்சியைக் கண்டும் கலங்காமல் அவற்றைத் தள்ளி நடக்கும் தன்மை படைத்தவர். செல்வாக்கு எங்கே யிருக்கிறது? யாரைப் பிடித்தால் நமக்குச் செல்வாக்கு கிடைக்கும் அல்லது எப்படி நடந்தால் செல்வாக்கு கிடைக்கும் என்று அவர் செல்வாக்கைத் தேடி அலேந்ததில்லே. ஆனல் நாளுக்கு நாள் எப்படியோ செல்வாக்கு அவரை வந்தடைகிறது. தன்பால் வந்தடைந்த செல்வாக்கை இழந்து தவிக்கும் நிலேமையில் அவர் இல்லே.

விளம்பரம் ஒரு சிலருக்கு வீண் கர்வத்தை தந்து விடுவதுண்டு. ஆனல் தோழர் மதியழகன் தன்னே விளம்பரப் படுத்திக் கொண்டதுமில்லே விளம்பரமான பிறகு வீண் கர்வமும் அடைந்ததில்லே.

படிக்கும் போதே பொதுத் தொண்டு செய்து நல்ல அனுபவம் பெற்றவர். ஆம்! அவர் மாணவராகவே கழகத்தில் நுழைந்தார். இன்னும் மாணவராகவே யிருக்கிருர். மாணவ மணம் மாருமல் இருக்கும் தோழர் மதியழகன் இன்று நம்மிடையில்லே சிறையிலே அடைபட்டுக் கிடக்கின்ருர். ஆம்! மூன்றுமாத சிறைதண்டனேயை அனுபவித்து விட்டுத்தான் வெளியே வருவார். அவர் செய்த தவறு அண்ணவுக்கு அருமையான தம்பியானது தான்.

"கடந்த நாலு ஆண்டுகளுக்கு முன்னல் திராவிட சமுதாயத்தின் நல்வாழ்விற்காக நமது அண்ண அவர்கள் நிர்மாணித்து எழில் தீட்டி வரும் திராவிட முன்னேற்றக் கழகம் என்னும் மாளிகையில் ஒரு செங்கல்லாக அமைந்தேன் என்ற பெரு

மையை திராவிடம் கொடுக்குமானல் அதைவிட இந்த தலை முறையில் பிறந்த திராவிட இளைஞனுக்கு வேறு என்ன கீர்த்தி வேண்டும்''

இந்த ஒரு பெருமையைத்தான்—இந்த ஒரு கீர்த்தியைத்தான் அவர் விரும்பினர்.

இன்னும் தோழர் மதியழகனை நன்ருகத் தெரிந்து கொள்ள வேண்டுமென்ருல் அவர் திராவிட மாணவர் இயக்கம் எவ்விதம் வளர்ந்தது என்பதைதன் ஆறு ஆண்டு அனுபவத்தை எடுத்துக் கூறுகிருர் அதனைப் படியுங்கள் தோழர் மதியழகனை நன்ருகப் புரிந்து கொள்வீர்.

ஒரு பல்கலைக் கழகப் பகுதியிலேயுள்ள ஒரு தென்னஞ் சோலை! அதற்குப் பக்கத்திலே ஒரு வீடு, அந்த வீட்டிலேயுள்ள ஒரு சிறு அறையிலே பத்து, பதினைந்து கல்லூரி மாணவர்கள், வட்டமாக, சிந்தனை தேக்கிய முகங்களுடன் ஏதோ திட்டமிடுபவர்கள் போல் அமர்ந்திருந்தனர். அந்த நாட்களிலே பல்கலைக் கழகங்கள், கல்லூரிகள் ஆகியவைகளிலே திராவிட இயக்கக் கருத்துக்களையும், பகுத்தறிவுக் கொள்கைகளையும் தாங்கிக் கொண்டிருந்த மாணவர்களைக் காண்பதே மிக மிக அருமை. நாடு வெளி நாட்டானிடம் சிக்கி வெட்கத்தின் சின்னமாய் அடிமைக்கூடமாய் இருந்த காரணத்தால் காங்கிரசிலே இருப்பது தான் கெளரவம் என்று கல்லூரிக்காளைகள் கருதிய நேரம், நாட்டின் நாலாவித பிரச்னைகளைப்பற்றியோ, நமது கலாச்சாரத்தின் மாண்புபற்றியோ, நாகரிகத்தின் சிறப்பு பற்றியோ, நாட்டுக்குள்ள நலிவுபற்றியோ, அதைப் போக்கும்

மார்க்கமும் மருந்தும் பற்றியோ சிந்திக்க மாட்டாதவர்களாய் மட்டுமில்லை, சிந்திக்க மறுப்பவர்களாய் இருந்தனர் மாணவ உலகிலே.

எங்கும் காரிருள்; வானத்திலே கருமேகங்கள்! ஒளியின் ரேகைக் கூடக்காணேம். இடிவிழுமா? மின்னல், அக ஒளியையும் பறித்து விடுமா? மழை கொட்டுமா? வெள்ளம் பொங்குமா? அல்லது பூமியே வெடித்து விடுமா? இதையெல்லாம் பற்றி எண்ண அவர்களுக்கு நேரமில்லை கல்லூரிகளிலே பகுத்தறிவுக் கொள்கைகளின் மணம் வீச வேண்டும். நமது கொள்கைகள் வெற்றி வலம் வர வேண்டும் அதற்கான ஒரு படைவரிசை, அணிவகுப்பு அமைந்தாக வேண்டும் இது அவர்களது அடங்கா ஆசை எனவேதான் அவர்களால் சேர்ந்த பத்துப் பதினைந்து இளைஞர்களும் “பகுத்தறிவு இளைஞர் கழகம்” என்ரேர் அமைப்பை நிறுவினர். அந்தக் கழகங் கூட ஊருக்கும் உலகத்திற்கும் தெரியாமல் இரகசிய சங்கங்களின் பாணியிலே இருக்க வேண்டும் என விரும்பினர் ஏனென்ருல், விளம்பரத்திற்காக ஏற்பட்ட அமைப்பல்லவே அது! விடுதலை விளக்கை ஏற்றிவைக்க வேண்டும் என்ற வேட்கையால் உந்தப்பட்டோரின் கூட்டு முயற்சியின் விளைவல்லவா அது! அவர்கள் ஏதோ சிலர்தான் இருந்தனரே தவிர, அவர்கள் முகங்களிலே வீசிய நம்பிக்கை ஒளி—விழிகளிலே தென்பட்ட உறுதி—இவர்கள் எண்ணம் கனவல்ல—நனவாகும் நாள் வரும் என்பதை தெளிவுபடுத்தியது.

அவர்கள் தங்களுக்குள்ளாகவே பேசிக்கொண்டனர். நாம் ஏதோ சிலர் இருக்கிறேம் என்று வெட்கப்

படவேண்டியதில்லை, சிலராக இருப்பவர் பலராக மாறும் நிலைவரும். நம்மைவிட சிலராக இருந்தோர், பெரிய சாம்ராஜ்யங்களை ஜெயித்ததாக, சர்வாதிகாரிகளையே ஆட்டிப்படைத்ததாகவெல்லாம் வரலாறுகளிலே நிகழ்ச்சிகள் இருக்கின்றன. உன்னத இலட்சியத்திற்காக உழைத்த உத்தமர்கள் ஒருவர் இருவரின் துணைக்கொண்டே ஒரு சமுதாயத்தை உருவாக்கிய நிலைமைகளும் உண்டு—நாம் நியாயம், நேர்மை, நீதி ஆகியவைகளின்மீதும், நமது இலட்சிய மாளிகையை எழுப்ப விரும்புகிறோம் எனவே எண்ணிக்கையல்ல நமது முக்கியம், எண்ணம்தான் முக்கியம். நமது கோட்பாடுகளை மற்றவருக்கும் எடுத்துச் சொல்லவேண்டும்.

திராவிட மாணவர்களிடையே ஒரு புதிய விழிப்பையும் எழுச்சியையும் உண்டுபண்ணவேண்டும். அத்தகையோரின் தொகை அறிவாலயங்களிலே அதிகரிக்கவேண்டும். அவர்களுக்கு கொள்கைகளின் அவசியத்தைச் சொல்வதற்காக புத்தம் புதிய கருத்துக்களைச் சேகரிக்கவேண்டும். நமக்குள்ளேயே வாதங்கள் செய்து அறிவுத் தெளிவு பெறவேண்டும், என்றெல்லாம் திட்டமிட்டனர். திராவிட நாடு தேவை என்பதற்கு தர்க்க ரீதியான காரணங்கள், மதங்கள் எப்படி உற்பத்தியாயின என்பதன் வரலாறு, கடவுள் உண்டா இல்லையா என்பதன் வாதப்பிரதிவாதங்கள் இவைகளெல்லாம் அவர்கள் பேச்சிலே அடிபட்டன. இந்தச் சம்பவம் நடந்த இடம் அண்ணாமலைப் பல்கலைக் கழகம் ஆண்டு 1943 ஆகஸ்டு மாதம் ஒரு நாள். அந்த சிறு கூட்டத்திலே இருந்தோர் நண்பர்கள் நெடுஞ்செழியன், அன்பழகன், செழியன், இளம்வழுதி, நான் இன்னும் சிலர்.

அந்த இரகசிய கழகத்திற்கு நண்பர் செழியனை செய லாளராக தேர்ந்தெடுத்தோம். அந்த சங்கம் நிறுவி முடிந்தது. கல்லூரி மண்டபங்களிலே நமது குரல் ஒலிக் கத் தொடங்கியது, தூங்கிக் கிடந்த மாணவரின் சிந் தனையைக் கிளறத் தவறவில்லை நமது செயல். ஆனல் அதற்காக மாணவர் வட்டாரத்திலே கிடைத்தது, வர வேற்பல்ல—வசவுதான். இன்மொழியல்ல—ஏளனந் தான். களிப்பு விழிகளல்ல—கடு கடுப்பான பார்வை தான்—இவற்றையெல்லாம் தாங்கிக்கொள்ள நெஞ்சு ரம் நமக்கு இருந்தது. திராவிடர் என்று சொல்லிக் கொள்ளவே மறுத்தனர் நமது மாணவர். நமது கொள்கை கோமாளித்தனமானது என்று கூறிக்கிடந் தனர். ஆனாலும் நாம் அயரவில்லை. ஆறு ஆண்டு களுக்கு மேல். உருண்டோடிவிட்டன.

இன்றைய தினம் என் மனக்கண் முன் அந்த தென்னஞ்சோலை யருகேயுள்ள வீட்டின் அறையிலே கூடிய நண்பர்கள் காட்சியையும் அன்று எடுத்துக் கொண்ட உறுதியையும் நினைவுப்படுத்திக்கொள் கிறேன்.

அண்ணாமலைப் பல்கலைக் கழகத்திலே நமது ஆசைக் கனவுகளுக்குச் செயலுருவம் தந்துகொண் டிருந்த வேளையிலே தான் குடந்தையிலேயிருந்து குதூ கலச் செய்தியொன்று வந்தது. நமது முயற்சிக்கு துவக்க விழாபோல திராவிட மாணவர் மாநாடு ஒன்று நடைபெறவேண்டும். அறிஞர்களை, பேராசிரியர்களை அழைத்து வழிவகை தெரியவேண்டும். மாணவர் படை அமையவேண்டும் என்று குடந்தை கல்லூரி மாணவர்

விரும்பினர். தோழர் தவமணிராசன், மாணவருலகின் விடி வெள்ளியாய்க் கிடைத்தார். குடந்தை மாநாடு மாணவர்கள் குமுறும் எரிமலை என்பதை அவரின் கொப்பளிக்கும் உணர்ச்சி கொடுமையை அழிக்கும் என்பதை எடுத்துக்காட்டிற்று. திக்குத்திசை தெரியா மல், திணறிக்கொண்டு, திருஇடத்திலே பயணத்தை துவங்கிய நமக்கு துணைவராய், தூண்டா விளக்காய் வழி காட்டியாய் அண்ணு அகப்பட்டார். நாம் அவருக்கு அகப்பட்டோம். ஆற்றலும் ஆர்வமும் கை குலுக்கியது. நமது வருகையை வாஞ்சையுடன் வரவேற்று திராவிட நாடு இதழ்தான் முதன்முதலில் தலையங்கம் தீட்டியது. நம்மையும் நமது நோக்கத்தையும் நாட்டுக்கு அறிமுகப் படுத்தி நாட்டுப் பணியிலே பங்குகொள்ள அழைத் தது.

குடந்தை மாநாடு நடந்த நாளிலே கல்லூரிகளிலே மட்டுமல்ல, உயர்நிலைப்பள்ளிகளிலும் நமது கொள்கை கள் உலவவேண்டும் என்பதை உணர்வதுபோன்று திருவாரூரில் தமிழ் மாணவர் மன்ற விழா நடைபெற் றது.

மறு திங்களிலே ஈரோட்டிலே அண்ணு அவர்கள் தலைமையிலே மாணவர் மாநாடு கூடியது. நாட்டின் பல பாகங்களிலிருந்து மாணவ மாணவிகளும் வந்து குவிந் தனர். நாட்டுக்கு இந்தக் கொள்கைக்காக பணிசெய்த தொடர்பு, மாணவர்களுக்கும், மாணவர்களின் துணை பலம் இயக்கத்திற்கும் இங்கே கிடைத்தது. இந்த மாநாட்டின் முடிவு, நாட்டின் நாலா பகுதிகளிலும் பகுத்தறிவுப் பிரச்சாரம் செய்வது என தீர்மானம்

நிறைவேறியது. அதன்படி, நாடெங்கும் ஒவ்வொரு மாவட்டத்திலும், நாடு, நகரம், பட்டி தொட்டிகளிலெல்லாம் அறிவின் தூதர்களாய், விடுதலைச் செய்தியை ஏந்திச் செல்வோராய் பவனிவந்தோம். கோடை விடுமுறையிலே, கொடும் வெயிலிலே சுழலெனச் சுற்றிவந்தோம். ஜாதிபேத இழிவு பற்றி, கண்மூடிக் குருட்டு பழக்கவழக்கங்களின் தீமைப்பற்றி, பகுத்தறிவின் அவசியம்பற்றி, நாட்டுவிடுதலை, விஞ்ஞானத்தின் அவசியம், சமதர்மத்தின் தேவை என்ற இப்படிப்பட்டவைகளைப் பற்றியெல்லாம் நாடு, இனம், கலாச்சாரம், கலை, வரலாறு இவற்றைப்பற்றியெல்லாம் தற்குறித்தனத்திலே ஆழ்ந்து தாசராகவிட்டிருக்கும் திராவிடருக்கும் எடுத்துக் காட்டினேம். இந்தப் பணியினல் தூங்கிக் கிடந்த திராவிடரிடையே ஓர் எழுச்சியை உண்டுபண்ண முடிந்தது. இதைத் தொடர்ந்து ஆண்டுதோறும் பயிற்சிப் பள்ளி ஏற்பாடு செய்து, பாசறை அமைத்து பக்குவம் செய்து, நாட்டின் நாலா பக்கங்களிலும், ஒவ்வொரு கோடை, விடுமுறையிலும் அனுப்பியுள்ளோம். இந்த வேலையின் பயனய் பல ஆயிரக்கணக்கான கூட்டங்கள் நடைபெற்றிருக்கின்றன. பல லட்சம் மக்களுக்கு நமது கொள்கைகளை எடுத்துரைத்திருக்கிறோம். நூற்றுக் கணக்கான மாணவ மணிகள் பேச்சாளர்களாக தங்கள் குடும்பத்தை, குதூகலத்தையெல்லாம் மறந்து கொள்கைக்காக உழைத்துள்ளனர். இந்த நிகழ்ச்சி எந்த நாட்டு மாணவர் வரலாற்றிலும் இல்லாத ஒரு புதுமை என்றே கூறவேண்டும்.

இந்தப் புத்துணர்ச்சிக்குப் பிறகு பல்வேறு இடங்களிலே திராவிட மாணவர் மாநாடுகள் நடைபெற்றன.

திருச்சியிலே வட மண்டல திராவிட மாணவர் மாநாடு, திருவாரூரிலே தென் மண்டல திராவிட மாணவர் ம்ாநாடு, மதுரையிலே தமிழ் நாடு திராவிட மாணவர் மாநாடு, விருதுநகரிலே இராமநாதபுரம் திராவிட மாண வர் மாநாடு, தஞ்சையிலே திராவிட மாணவர் மாநாடு, புதுப்பேட்டையிலே திராவிட மாணவர் மாநாடு என்ற பல மாணவர் மாநாடுகள் வளர்ந்துவரும் இயக்கத்திற்கு இனிப்பூட்டும் சேதியாக இருந்தன. இவை ஒவ்வொன் றும் மாணவர்களின் அணிவகுப்பை அமைக்கும் பயிற் சிக் களங்களாயின. நமது வளர்ச்சியின் ஒவ்வொரு மைல் கல்லென்றே சொல்லவேண்டும்.

நமது கருத்துக்கள் ஒலிக்காத கல்லூரி மண்டப மில்லை. பள்ளிகளெல்லாம் நமது பாசறைகள் என்ற சூழ்நிலை வளர்ந்தது. பல்லாயிரக்கணக்கான மாணவர் கள் நமது பாதையிலே நடக்கத் தொடங்கினர். இந்தப் பருவத்திலேதான், தங்கக் கோட்டையிலே ஒளிவிடும் வைரமணிகளென அண்ணமலைப் பல்கலைக் கழகத் திலேயிருந்து தோழர்கள் நெடுஞ்செழியன், அன்பழ கன், செழியன், பூ. கணேசன், இளம்வழுதி, இமயவரம்பன், வி. வி. இளஞ்செழியன், குடந் தையிலிருந்து தவமணி, இராசன், கருணனந்தம், திருவாரூரிலே யிருந்து மு. கருணநிதி, அரங்கண்ணல், தில்லையிலேயிருந்து வில்லாளன், திருநாவுக்கரசு, திரு மாறன், பச்சையப்பன் கல்லூரிகளிலே யிருந்து கஜேந் திரன், இளஞ்செழியன், இராதாமணளன், ஈரோட்டிலே யிருந்து சம்பத், அப்பாவு, மதுரையிலே யிருந்து சத்தியேந்திரன், விருதுநகரிலேயிருந்து ஆசைத்தம்பி, அதிராம்பட்டினத்திலே யிருந்து இளங்கோ—இப்படிப்

பட்ட தூங்காமணி விளக்குகளைப் பெற்றுப் பெருமைப் பட்டோம் நாட்டுக்கு அவர்கள் தொண்டை காணிக்கை யாக்கினேம்.

இந்த நிலைமைக்கு எழிலுருவம் தருவது போல நீடாமங்கலத்திலே மாகாண திராவிட மாணவர் மாநாடு கூடியது அண்மையில் மறைந்த பேராசிரியர் சேலம் கல்லூரித் தலைவர் ராமசாமி அவர்கள் கலந்து தலைமை தாங்கி அறிவுரை வழங்கினர். அந்த மாநாட்டின் பயனை நாடெங்கும் கிளைக்கழகங்கள் நிறுவினேம். 100-க்கு மேற்பட்ட மாணவர் கழகங்கள் மலர்ந்துள்ளன என்று பெருமையோடு கூற முடிந்தது மத்திய கழகத்துடன் சங்கிலித் தொடர்பால் இணைத்தோம் நமது கூட்டு சக்தியையும், ஒற்றுமை வலிமையும் கண்டு வைதீகம் சீறவும், அரசாங்கம் மருளவும், மாற்றார்கள், அவர்கள் யார்? புயலெனக் கிளம்பி யிருக்கிறார்களே என்று எண்ண வேண்டிய நிலைமையும் ஏற்படுத்தியது. பேச்சு மன்றங்களிலே நமது தோழர்களுக்கே வெற்றி மாலை, எழுதுவதிலே இவர்களுக்கு இணையில்லை. விளையாட்டிலே வெற்றி வீரர்கள். படிப்பிலே யாருக்கும் இளைத்தவர்களல்ல என்ற பெருமையை நமது மாணவர்கள் பெற்றுத் தந்தனர்.

நமது கொள்கையைத் தாங்கிய குற்றத்திற்காக நமது மாணவர் பட்ட கஷ்ட நஷ்டம் கொஞ்சமல்ல பெற்றோரின் வருத்தம், ஆசிரியரின் கோபப்பார்வை, ஊர் மக்களின் உறுமல், ஊராள்வோரின் உபத்திரவம் இவ்வளவும் பாய்ந்ததுண்டு இவ்வளவையும் துச்சமெனக் கருதும் துணிவுள்ளம் நிரம்ப இருந்தது.

1947-ஆம் ஆண்டிலே அண்ணுமலைப் பல்கலைக் கழகத்திலே ஓர் பெரும் அமளியை உண்டு பண்ணினர் ஆணவக்காரர்கள் பல்கலைக் கழக விடுதியிலே பறந்த நமது இலட்சியக் கொடி காக்கும் முயற்சியில் நமது மாணவர்களின் குருதி கொட்டிற்று! காங்கிரஸ் கட்சி மாணவர்கள் போலீஸ் வெறியாட்டத்துடன் நமது மாணவர்கள் அறைகளிலே புகுந்து மண்டைகளை உடைத்தனர். பலர் கைகால்கள் நொறுக்கப் பட்டனர். அன்றைய தினம் அண்ணுமலை நகர் மாணவர் நமது கொடிக்கு இரத்தத்தால் வர்ணம் பூசினர். அண்ணுமலை நகர் மண்ணிலே திராவிட விடுதலைக்கு இரத்த அபிஷேகம் நடைபெற்றது வெந்த புண்ணிலே வேலாக ஆளவந்தார் நமது மாணவர் இயக்கத்தை ஒழிப்பதற் கென நான் உட்பட பலரின் மீது வழக்கும் தொடர்ந்த னர். மந்திரி பீடத்திலே இருந்த ஒருவரே இதற்கு தூபம் போடுபவரானர். பலரின் படிப்புக்குத் தடை விதிக்கப்பட்டது. இறுதியிலே வழக்கு மன்றம் நிரபராதி களென கூறியது. இவற்ருலெல்லாம் நம்மைச் சிதற டிக்க செய்தவர்களின் முயற்சி மண்ணைக் கவ்வியது. நாம் மறைந்து விடுவோம் என மமதையாளர் நினைத்த னர். மாருக அந்த மந்திரியார்தான் மந்திரி பீடத்திலே யிருந்து மறைந்தார்! நாமோ மடமடவென வளர்ந்திருக் கிருேம்.

அந்த நிலையிலேதான் திராவிடத்திற்கு ஒரு மா பெரும் சோதனை ஏற்பட்டது. எங்கேயோ இருக்கும் இந்திச் சனியனை நமது சின்னஞ் சிறுவர்களின் தலையிலே சுமத்தி தமிழ்க் கலாச்சாரத்தை சூறையாடும் திருத் தொண்டிற்கு நமது மந்திரிமார் அச்சாரம் போட்டு

விட்டனர். எப்பக்கம் வந்து புகுந்து விடும், இந்தி எத்தனை பட்டாளம் கூட்டி வரும் என்று தமிழகம் துடித்துக் கிளம்பியது. நாட்டுத் தலைவர்கள், தமிழ் வித்தகர்கள், பொது மக்கள், தாய்மார்கள் சகலரும் ஏகோபித்த எதிர்ப்பை எழுப்பினர். மறைந்த தமிழ்க் கடல் மறைமலை அடிகள் தலைமையிலே செயிண்ட் மேரி மண்டபத்திலே மாநாடு ஒன்றும் நடைபெற்றது. தலைவர்கள் நாட்டு மக்களுக்கு இந்தியின் தீமைகளை எடுத்து உரைத்துக் கொண்டிருந்தனர். 1948 ஆகஸ்ட் மாதத்திலே மாகாண மாணவர் இந்தி எதிர்ப்பு மாநாடு கூட்டினோம். இந்த மாநாட்டிற்கு தமிழகம் முழுதுமுள்ள பல்வேறு கல்லூரிகளிலிருந்தும் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர். சென்னை மெமோரியல் மண்டபத்தில் நடைபெற்ற இந்த மாநாட்டிலே இந்தியை எதிர்த்துப் போராட்டம் துவக்க வேண்டிய அவசியமும் அவசரமும் குறித்தும், மாணவர்கள் மேற்கொள்ள இருக்கின்ற பங்கு குறித்தும் ஆர்வம் நிறைந்த உரைகள் நிகழ்த்தப் பட்டன. இந்த மாநாட்டின் மறுதினமே இந்தி எதிர்ப்பு கமிட்டி கூடி, அண்ணு அவர்களை தலைவராக நியமித்து அறப்போர்ப் பிரகடனம் செய்தது. அறப்போருக்கு ஆதரவாக அமைந்திருந்தனர் ஆங்காங்குள்ள மாணவர்கள் பல்வேறு இடங்களிலே நடைபெற்ற அடையாள மறியல்களில் பெரும்பங்கு கொண்டனர். சில மாணவர்கள் சிறைத் தண்டனையையும் ஏற்றனர். நமது ஆற்றல் மிகுந்த எதிர்ப்புக்கு பயந்து கட்டாய இந்தி எடுபட்டு விட்டது.

கம்யூனல் ஜி. ஒ. பற்றி உயர்நீதி மன்றத்தீர்ப்பால் தேள் கொட்டியது போன்ற நிலை ஏற்பட்டது திராவிட

மாணவ உலகுக்கு, வகுப்பு நீதி வேண்டும், சுப்ரீம் கோர்ட்டிற்கு அப்பீல் செய், அரசியல் சட்டத்தைத் திருத்து என்ற முழக்கங்களுடன் பச்சையப்பன் கல்லூரியிலே முதன் முதல் போர்ப் பரணி தொடங்கியது. திராவிட மாணவர்களின் நலத்தை பாதிக்கும் இந்த செயலை எதிர்த்து துவக்கப்பட்ட போராட்டத்திற்கு பச்சையப்பன் கல்லூரி வேலை நிறுத்தத்தன்று கொடிமரம் நாட்டப்பட்டது. இரண்டு நாட்கள் பிரம்மாண்டமான ஊர்வலமும் பொதுக் கூட்டமும் நடைபெற்றன. இந்த போராட்டத்தில் ஆந்திரர், கேரளர், கன்னடியர் ஆகிய மாணவரும் நம்மோடு கை கோர்த்து நின்றனர். அவர்களைச் சேர்ந்த ஐக்கிய முன்னணியை உருவாக்கிக் காட்டினேம். நாட்டு மக்களின் ஆதரவை சேகரிக்க முடிந்தது. இதைத் தொடர்ந்து சென்னை ஆர்ட்ஸ் கல்லூரி ஸ்டிரைக், சேலம் கல்லூரி மாணவர் சிறப்பான ஊர்வம், வாணியம் பாடியிலே யாரும் கல்லூரிக்கு வரவில்லை, விருதுநகரிலே அணிவகுப்பு, அண்ணுமலைப் பல்கலைக் கழகத்திலே அமைதியான வேலை நிறுத்தம், மதுரை அமெரிக்கன் கல்லூரியில் போராட்டம், குடந்தையிலே கோவையிலே வகுப்பு நீதிக்காக மாணவர் ஹர்த்தால், திருச்சியிலே, திருநெல்வேலியிலே கல்லூரிக் கதவுகள் மூடிக் கிடந்தன என்று இப்படிப்பட்ட செய்திகளை பத்திரிகைகளுக்கு விருந்தாக்கிக் காட்டினர் நமது போர்க் கோலம் பூண்டுள்ள நமது மாணவ மணிகள். இவைதான் என்றில்லாமல் பெரியகுளம், ஆரணிப்போன்ற பல நூறு உயர்நிலைப் பள்ளிகள் உரிமை முழக்கம் செய்துள்ளது. இங்கெல்லாம் திராவிட மாணவர் முன்னேற்றக் கழகம்

தலைமைத் தாங்கி நடத்தியிருக்கிறது. சென்னையிலே யுள்ள என்ஜினீயரிங், ஸ்டான்லி மெடிகல் கல்லூரி போன்ற தொழில் கல்லூரிகள், தங்களது கலாசாலை சங்கங்களின் மூலமாகவே அதிகாரப் பூர்வமாக வகுப்பு நீதியின் அவசியம் குறித்து தீர்மானம் நிறைவேற்றி அரசாங்கத்தாருக்கு அனுப்பி வைத்துள்ளனர். டில்லி மந்திரி திவாகருக்கு கருப்புக் கொடி காட்டிய நிகழ்ச்சியிலே பல நூறு மாணவர்கள் கலந்து வட நாட்டு ஆதிக்க வெறுப்பைக் காட்டிக்கொண்டனர்.

பொட்டல் வெளியிலே—தானியம் பூத்துக் குலுங்கும் காட்சி—அறுவடைக்கு தயாராகிய அழகிய காட்சி—அப்படிப்பட்ட அறுவடை ஆறு ஆண்டுகளில் வெற்றிப் பெற்றிருக்கிறோம். ஆனல் திராவிட மாணவர்களுக்கு எதிர்காலம் ஏராளமான வெற்றியைத் தரக் காத்திருக்கிறது. அவர்கள் உழைப்பால் உருவாக இருக்கும் இலட்சிய மாளிகைகளை, அவர்கள் பிடிக்க இருக்கும் கீர்த்திக் கோட்டைகளை காலம் காட்டத்தான் போகிறது. வளர்க திராவிட மாணவர் இயக்கம்!

வாழ்க மதியழகன்!

ஸ்ரீ மகள் அச்சகம், சென்னை-1

திராவிட இயக்கத் தலைவர்கள்

# வாழ்க்கை வரலாறுகள்

★

| | | | |
|---|---|---|---|
| 1. | அறிஞர் அண்ணாதுரை | 0 | 8 |
| 2. | தலைவர் பெரியார் | 0 | 8 |
| 3. | புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் | 0 | 8 |
| 4. | கடமை வீரர் கருணாநிதி | 0 | 8 |
| 5. | அஞ்சா நெஞ்சன் அழகர்சாமி | 0 | 8 |
| 6. | பன்னீர் செல்வம், பாண்டியனார், வேலாயுதம் | 0 | 8 |
| 7. | நெடுஞ்செழியன், நடராசன், மதியழகன் | 0 | 8 |
| 8. | சம்பத், நீலமேகம் | 0 | 8 |
| 9. | ஆசைத்தம்பி, சிற்றரசு | 0 | 8 |
| 10. | இராமாமிர்தத்தம்மையார், பூங்கோதை, அருண்மொழி, | 0 | 8 |

— கழிவு வழக்கம் போல் —

கிடைக்கும் இடங்கள்

**கலைமன்றம்**
122, வரதமுத்தியப்பன்தெரு,
சென்னை—1

**M.S. ராமுலு கம்பெனி**
286, சைனா பஜார்
சென்னை—1